பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர்ஆண்டு2030 ஆனி 03 வியாழக்கிழமை [17-06-1999] UTHAYAN A LivelyNationalTamilDaily கதிர்: 174

# செம்மணியில் புதைகுழி தோண்டும் பணி நேற்று நண்பகல் ஆரம்பம்!

## சடலம் ஒன்றின் முழங்கால் பகுதி கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 17

செம்மணியில் மனிதப் புதைகுழிகள் உள்ளன எனக் கருதப்படும் பகுதிகளில் விஞ்ஞான ரீதியிலான தோண்டுதல் பணி சர்வதேச பார்வையாளர்களின் முன்னிலையில் நேற்று நண்பகல் ஆரம்பமானது.

செம்மணி – நல்லூர் வீதியில் உப்பளத்துக்குச் செல்லும் பாதைக்கு அருகில் தோண்டப்பட்ட முதலாவது புதைகுழியில் ஓர் ஆணின் எலும்புக்கூடு இருக்கும் வாய்ப்பு உள்ளதாக நிபுணர்கள் தகவல் வெளியிட்டனர்.

கிருஷாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவு கொலை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ பலத்த பாதுகாப்புடன் செம்மணிப் பகுதிக்கு நேற்று அழைத்து வரப்பட்டார்.

கண்டி வீதியில் இருந்து நல்லூருக்குச் செல்லும் செம்மணி – நல்லூர் வீதியில் அரை மைல் தூரத்தில் செம்மணி உப்பளத்துக்குச் செல்லும் பாதைக்கு அருகில் முதலாவது புதைகுழியைச் சோமரத்ன ராஜபக்ஷ அடை

[10 ஆம் பக்கம் பார்க்க]

## நீதிமன்றில் ஒருமணி நேரம் வாக்கு மூலம் அளித்தார்

யாழ்ப்பாணம், ஜூன் 17

செம்மணிப் புதைகுழி தொடர்பான விவகாரம் யாழ். நீதிமன்றத்தில் நேற்றுக் காலை எடுக்கப்பட்ட சமயம், லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ ஒரு மணி நேரம் வாக்கு மூலம் அளித்தார்.

யாழ். மேலதிக நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ள எம். இளஞ்செழியன் முன்னிலையில் இந்த விவகாரம்

[10ஆம் பக்கம் பார்க்க]

## ஒரு புதைகுழியையே ராஜபக்ஷ காட்டினார்

யாழ்ப்பாணம், ஜூன் 17

செம்மணிப் புதைகுழிகளை அடையாளம் காட்ட அங்கு அழைத்துச் செல்லப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ ஒரு புதைகுழி இருக்கும் இடத்தையே நேற்று அடையாளம் காட்டினார்.

அந்தப் புதைகுழியில் மூவரின் சடலங்கள் புதைக்கப்பட்டன என்றும்—

ஏனைய புதைகுழி இடங்களைப் பின்னர் காட்டுவதாகவும் — அவர் நீதிவானிடம் தெரிவித்தார்.

அவர் அடையாளம் காட்

(10 ஆம் பக்கம் பார்க்க)





செம்மணியில் புதைகுழி தோண்டுவது தொடர்பான விவகாரம் நேற்று யாழ். நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட சமயம் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ வாக்குமூலம் அளிப்பதை மேலே உள்ள படத்திலும், செம்மணியில் புதைகுழி தோண்டும் பணி நடப்பதை கீழே உள்ள படத்திலும் காணலாம்.

படங்கள்:- எம். மணிவண்ணன்

## சர்வதேச உள்ளூர் பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 17

செம்மணியில் புதைகுழி தோண்டும் பணி நேற்று ஆரம்பமானபோது சர்வதேச அமைப்பின் பிரதிநிதிகள், உள்ளூர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பார்வையாளர்களாகப் பங்குபற்றினர்.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த சட்ட மருத்துவத் துறை மற்றும் வைத்தியத் துறை நிபுணர்களான டாக்டர்கள் வில்லியம் ஹக்லேண்ட், மெலிஸா கோர்ணர், கெவின் லீ ஆகியோரும்—

றுகுணு பல்கலைக்கழக சட்ட மருத்துவத்துறை நிபுணர் நெரியல்லகே சந்திரசிறி, மண்ணியல் நிபுணர் கே. ஏ. நந்தசேன, இரசாயனப் பகுப்பாய்வாளர் ஆனந்த மெண்டிஸ், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர் என். நச்சினார்க்கினியன் ஆகியோரும் — புதைகுழி தோண்டும்பணிகளை மேற்கொண்டனர்.

[10 ஆம் பக்கம் பார்க்க]

## வன்னிக்குப் பத்திரிகையாளர்

வவுனியா, ஜூன் 17

'போர்க்கோஷம் - 4' இராணுவ நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட இடங்களுக்கு நேற்று பத்திரிகையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட பாப்பாமோட்டை, அடம்பன், ஆண்டான்குளம் ஆகிய பகுதிகளுக்கே பத்திரிகையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பத்திரிகையாளர்களை அழைத்துச் செல்வதற்கு முன்னர் அவர்களை வவுனியாவில் சந்தித்த வன்னிப் படைகளின் தளபதி லயனல் பலகல்ல 'போர்க்கோஷம்–4' இராணுவ நடவடிக்கை மூலம் 358 சதுர கிலோ மீற்றர் பிரதேசம் படையினரால் கைப்பற்றப்பட்டதாகவும்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## மீனவர் சடலமாக மீட்பு

மணற்காட்டுக் கடலில் காணாமற்போன மீனவர் மூன்று நாள்களின் பின்னர் நேற்றுக் காலை அப்பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த 14ஆம் திகதி மீன் பிடிக்கச் சென்ற சமயம் கட்டுமரத்திலிருந்து தவறிக் கடலில் வீழ்ந்த இதேஇடத்தைச் சேர்ந்த கொன்சலன் கீதன் (தவராசா – வயது 38) என்

[10 ஆம் பக்கம் பார்க்க]

# புதைகுழிகள் உள்ள 10 இடங்களை காட்டத் தயார் என்கிறார் ராஜபக்ஷ!

யாழ்ப்பாணம், ஜூன் 17

"செம்மணி மற்றும் அரியாலைப் பகுதிகளில் 1996ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டவர்கள் புதைக்கப்பட்ட பத்து இடங்களை அடையாளம் காட்டுவேன்''

இப்படி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ நேற்று யாழ். நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

கிருஷாந்தி குமாரசாமி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சோமரத்ன ராஜபக்ஷ யாழ். நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தின் விவரம் வருமாறு:-

1996ஆம்ஆண்டு அரியாலை துண்டிப்பகுதியில் அமைந்திருந்த 7 ஆம் படையணியின் முகாமில் சிவில் நிர்வாகப் பகுதியில் கட்டளை அதிகாரியான கப்டன் லலித்ஹேவாவேக்குக் கீழ் பணி புரிந்தேன்.

அரியாலை துண்டிப் பகுதியில் வீடுகளில் உள்ளவர்களின் விவரங்கள் மற்றும் அந்தப்பகுதியில் உள்ள இளைஞர்களின் விவரங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்யும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(9 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கைதடி ஆயுர்வேத ஆஸ்பத்திரிக்கு மருந்து அனுப்பப்படுவது நிறுத்தம்

## கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கைதடியிலுள்ள ஆயுர்வேத போதனா வைத்தியசாலைக்கு ஆயுர்வேதத் திணைக்களத்தினால் மருந்து வகைகள் எதுவும் அனுப்பி வைக்கப்படவில்லை.

இதனால் இந்த வைத்திய சாலையில் மருந்து வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்த வைத்திய சாலையில் பத்து வைத்திய அதிகாரிகள் கடமையாற்ற வேண்டிய இடத்தில் 4 வைத்திய அதிகாரிகளே கடமையாற்றுகின்றனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-5)

# சிப்பாய்க்கு விளக்கமறியல்

நெல்லியடி, ஜூன் 17

இராணுவமுகாமில் பயிற்சி வேளையில் இராணுவ சார்ஜன் ஒருவரை துப்பாக்கியால் சுட்டதாகக் கூறப்படும் சிப்பாயை இந்த மாதம் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் அ. க. நடராசா உத்தரவிட்டார்.

வடமராட்சிப் பகுதியில் உள்ள பல்லப்பை இராணுவ முகாம் பகுதி பயிற்சித் தளத்தில் இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை காலை இடம் பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக துப்பாக்கியால் சுட்ட இதே முகாமைச் சேர்ந்த கேவா பத்திரன கேசுமந் பிரியந்த (வயது 26) என்பவரை இராணுவத்தினர் கைதுசெய்து பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்திருந்தனர்.

சந்தேக நபரை நேற்று முன்தினம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் பொலீஸார் ஆஜர்செய்த சமயமே விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

சூட்டுச் சம்பவத்தில் வயிற்றுப் பகுதியில் படுகாயமடைந்த இராணுவ சார்ஜன் அவசர சிகிச்சைக்காக தற்பொழுது பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-109)

# சுழற்சி முறை கடன் உதவி

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள விதவைகள், வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்வோர், இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்தோர்கள் நூறுபேருக்குச் சுழற்சிமுறைக் கடனாகத் தலா பத்தாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

பனை வெல்லம், பனம் கற்கண்டு, கல்லாக்காரம் ஆகியவற்றைத் தயாரிக்கும் பெண்களுக்கே அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் உதவியுடன் வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் இக்கடனை வழங்கியுள்ளது.

# கைதிகளை ஏற்றி வந்த பொலீஸ்வாகனம்விபத்தில்

## வல்லை வெளியில் சம்பவம்

நெல்லியடி, ஜூன் 17

நீதிமன்றம் நோக்கி கைதிகளை ஏற்றி வந்த பொலீஸ் வாகனம் ஒன்று நேற்று முற்பகல் வல்லைவெளிப் பகுதியில் விபத்துக்குள்ளாகியதில் மூவர் காயமடைந்தனர்.

காங்கேசன்துறை பொலீஸ் நிலையத்திலிருந்து பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்துக்கு தம்பதிகளான இரு கைதிகளை ஏற்றிக் கொண்டு வந்த சமயமே மரம் ஒன்றுடன் வாகனம் மோதியது.

இந்த விபத்தினால் நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்பட்ட இணுவில் தெற்கைச் சேர்ந்த சின்னத்துரை- அழகானந்தம் (வயது 35) அவரது மனைவி அ. மாலினி (வயது 25) ஆகிய இருவரும் வாயிலும், கை, கால்களிலும் காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதேவேளை இந்த வாகனத்தில் பயணம் செய்த பொலீஸ் சார்ஜன்ட் ஒருவரும் சிறு காயமடைந்து மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். (இ-109)

# திருடிய பொருள்களுடன் கள்வர்கள் ஊர்வலம்!

அச்சுவேலியில் இரவு கடை உடைத்து பொருள்களை களவாடிய திருடர்கள் அவர்கள் திருடிய பொருள்களுடன் ஊர்வலமாகக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

அச்சுவேலி பஸ் நிலையப் பகுதியில் உள்ள கல்பனா ஸ்ரோர்ஸ், கண்ணகி அச்சகம் ஆகியவற்றின் கதவுகளை உடைத்து இரவு வேளையில் பொருள்களைத் திருடிய திருடர்களே களவெடுத்த பொருள்கள் சகிதம் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஞாயிறு இரவு கண்ணகி அச்சகத்தின் கதவு உடைக்கப்பட்டு றேடியோ, மணிக்கூடு, காகிதம் வெட்டும் கத்திகள் உட்பட சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டன.

திங்கள் இரவு கல்பனா ஸ்ரோர்ஸ் கதவு உடைக்கப்பட்டு பிஸ்கட்டுகள், பால்மா வகைகள், சீனி, உணவுப் பொருள்கள் உட்பட சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டன.

செவ்வாய்க்கிழமை நண்பகல் பொருள்கள் சகிதம் திருடர் இருவரும் அச்சுவேலி பஸ் நிலைய வீதி வழியாக அச்சுவேலி பொலீஸ் நிலையத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அச்சுவேலி பொலீஸார் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து வருகின்றனர். (ஐ-11)

# இந்துநாகரிக பாட முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 17

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சையில் இந்துநாகரிகம், இந்துசமயம் ஆகிய பாடங்களுக்கு தோற்றும் மாணவர்களுக்காக யாழ். சைவ பரிபாலன சபை நடத்தும் முன்னோடிப் பரீட்சை அடுத்த மாதம் 19 ஆம் திகதி முதல் நான்கு தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 68 பாடசாலைகளில் கல்வி கற்கும் சுமார் 700மாணவர்கள் இந்த முன்னோடிப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கின்றனர் எனவும்—

வெளிமாவட்டப் பரீட்சார்த்திகளுக்குரிய வினாப் பொதிகள் யாவும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு உரிய மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும்—

சைவபரிபாலன சபையின் பரீட்சைக் காரியதரிசி சைவப் புலவர் வ. கந்தசாமி தெரிவித்தார். (ஐ-7)

# தாக்குதலுக்கு இலக்கானோர் படைஅதிகாரியால் விசாரணை

யாழ்ப்பாணம் ஜூன் 17

இராணுவத்தால் தாக்கப்பட்ட இரு பொதுமக்களை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அனுசரணையுடன் நேரில் அழைத்த512 பிரிகேட் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் எஸ். என். ஆர். மாரம்பே அவர்களின் பாதிப்புபற்றி நேரில் கேட்டறிந்து கொண்டார்.

யாழ்ப்பாண வாசிகளான மாணிக்கம் சுரேந்திரராஜா, எஸ். பாலசிங்கம் ஆகியோர் 1998ஆம் ஆண்டு படையினரின் தாக்குதலுக்குள்ளானார்கள்.

இத்தாக்குதல் குறித்து இவர்கள் இருவரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

மனித உரிமைகள் ஆணைக் குழு இச்சம்பவம் தொடர்பாக இராணுவ தலைமைப் பீடத்துக்குப் புகார் செய்ததையடுத்தே மேற்படி இருவரும் நேரில் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

512 பிரிகேட்டில் கடந்த திங்களன்று இடம் பெற்ற இந்த விசாரணைகளின் போது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாவட்ட இணைப்பாளர் எஸ், சிறீதரன் மற்றும் யாழ். அதிகாரி செல்வி கௌரி சுந்தரலிங்கம் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். (ஐ-5)

# சிறுவர் உரிமை தொடர்பான கலந்துரையாடல்

வலி. தெற்கு, ஜூன் 17

சிறுவர் உரிமைகள் தொடர்பாக பாடசாலைஅதிபர்களுக்கான கலந்துரையாடலும் செயலமர்வும் எதிர்வரும் சனிக்கிழமை சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் நடைபெற உள்ளது.

வலிகாமம் கல்வி வலயம் பிரிவு ஒன்றுக்கான பாடசாலை அதிபர்கள் இதில் கலந்து கொள்ள உள்ளனர்.

சிறுவர் நல மேம்பாட்டை முன்னிட்டுசிறுவர் பாதுகாப்பு நிதியம் இக் கலந்துரையாடல்களையும் செயலமர்வுகளையும் நடத்தி வருகின்றது.

இது போன்ற கலந்துரையாடல்கள் வலிகாமம் வலயம் பிரிவு இரண்டு, மூன்று ஆகியவற்றில் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளன. (ஐ-152)

# மரண அறிவித்தல்கள்

## செல்லச்சாமி இராமநாதன் செட்டியார்

மாத்தளையைப் பிறப்பிடமாகவும் இல. 148, கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லச்சாமி இராமநாதன் செட்டியார் அவர்கள் 16 - 06 - 99 நேற்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லச்சாமி செட்டியாரின் அன்பு மகனும், இந்தியாவில் வசிக்கும் கதிரேசன், பூவலிங்கம், நாகேந்திரம், எதிர்மனசிங்கம் (ஜேர்மனி), கமலாச்சி (நீர்கொழும்பு), பிரபாவதி (நீர்கொழும்பு), பூர்ணலெட்சுமி (இந்தியா), வடிவாம்பிகை, ஜெயராமன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், க. காமினியின் மைத்துனரும், திருமதி கோபாலன் மணி, கி. தேவதாஸ் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும், R. S. பீற்றரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (17 - 06 - 99) நடைபெற்றுப் பூதவுடல் 3-30 மணியளவில் தகனக் கிரியைக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி கோபாலன் மணி
கி. தேவதாஸ்
(பிள்ளையார் விலாஸ் பப்பட உரிமையாளர்கள்)

148, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(66682)

## கதிரேசு செல்லையா

(ஓய்வு பெற்ற தலைமையாசிரியர்)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் 316, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு — செல்லையா 16-06-1999 புதன் கிழமை இரவு காலமானார்.

அன்னார் திருமதி செ. நாகம்மா அவர்களின் அன்புக் கணவரும் ம. விஜயலக்ஷ்மி, சு. புனிதவதி [U.K.], த. காந்திமதி [வவுனியா], தி. இந்துமதி [உப-தபால் அதிபர், உருத்திரபுரம்], ம. மந்தாகினி [பிரான்ஸ்], செ.இளங்கோ [ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி], செ. ராஜ்மோகன் [கனடா], செ. முரளிமோகன் [பயிற்சி ஆசிரியர், பலாலி ஆசிரிய கலாசாலை] ஆகியோரின் அன்புத் தந்தையும் இ. மருதலிங்கம் [விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை], மா. சுந்தரலிங்கம் [U K.], க. தர்மகுலசிங்கம் [D. I., வவுனியா, C.T.B.], க.திருச்செல்வம் [தபால் அதிபர், கிளிநொச்சி], பெ. மனோகரன் [பிரான்ஸ்], திருமதி இளங்கோ—லதாவாணி [ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி], திருமதி ராஜ்மோகன் — கலைவாணி (கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும் ம.பிரதீபன் [கலைப்பீடம் 3ஆம் வருடம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்], ம. பிரசாந்தன் [பயிற்சி ஆசிரியர், பலாலி ஆசிரிய கலாசாலை], ம. பிரவிந்தன் [உயர்தர மாணவன், யாழ். புனித பரியோவான் கல்லூரி], சு. சிந்துஜா, சு. ஜனகன், சு. ஜனார்த்தன், சு. சயனுயா, த. கீர்த்திகா, த. டிவாரகா, த. திருவரன், தி. துளசிகன், தி. சுபாங்கி, தி. தரணிபன், ம. வாகீசன், ம. யாசகி, இ. அபிநயன், இ. ஆரதி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நல்லூர் 316, நாவலர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று [17-06-99] வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
திரு. இ. மருதலிங்கம்
(மருமகன்)

316, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/7925]


## அறிவித்தல்

சகலவிதமான
பேக்கறி போறணை
கட்டும் வேலைகள் இருந்தால் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வ. துரைராசா
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
[வைரவர் கோயில் முன் உள்ள ஓட்டு தொழிற்சாலை]

(66675)

## நாகம்ஸ்

சுன்னாகம்
இன்றுமுதல்
முரளி, சூர்யா,
ஜிவிதா, ராதிகா
நடித்த
காதலே நிம்மதி
காட்சிகள் 11.00, 2.30
[புதிய நேரம்]
[66678]

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி
மம்முட்டி — தேவயானி
விவேக் நடித்த
மறுமலர்ச்சி
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரப்படி)
Fax No. 070- 212223
FOREIGN T. P. NO-
0094 - 70 - 212223
(சி/66667,

## ராஜா

யாழ்ப்பாணம்
விஜய், தேவயானி,
ரம்பா, மணிவண்ணன்,
செந்தில்
மற்றும் பலர் நடித்த
நினைத்தேன் வந்தாய்
10.30, 2.30
[சி/7862]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கீட்டுஅட்டைகள்,உணவுமுத்திரை

# வலி.கிழக்கு சங்கங்களில் மீளாய்வு

வலி.கிழக்கு, ஜூன் 17

வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் வழங்கப்பட்ட 'இ' பங்கீட்டு அட்டைகளும், இடம்பெயர்ந்தோர் நிவாரண முத்திரைகளும் கட்டம் கட்டமாக மீளா செய்யப்படவுள்ளன.

முதற்கட்டமாக வலி. கிழக்கு (வடபகுதி) பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாட்டு எல்லைக்குள் வழங்கப்பட்ட முத்திரைகள் நாளை வெள்ளிக்கிழமை சம்பந்தப்பட்ட கிளைகளில் வைத்து காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மீளாய்வு செய்யப்படும்.

மீளாய்வு செய்யப்பட்ட முத்திரைகளுக்கு மட்டுமே 99 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கான நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட சகலரும் மீளாய்வுக்குத் தவறாது சமுகம் அளிக்கும்படி கோப்பாய் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

இதேவேளை —

மீளாய்வின்போது தம்மை அடையாளம்காண்பிக்கக்கூடியதும் தாம் அப்பிரிவில் வசிப்பவர்கள் என்பதை உறுதிப்படுத்தக்கூடியதுமான அடையாள அட்டைகள், பங்கீட்டு அட்டை, நிவாரண முத்திரை பொது சன மாதாந்த உதவிப் பணம் பெறும் அட்டை,இராணுவப் பதிவுப்பத்திரம் ஆகிய சகல ஆவணங்களையும் பிரதான குடியிருப்பாளர்கள் எடுத்து வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்கள் இருந்தாலொழிய பிரதான குடியிருப்பாளரைத் தவிர்ந்த ஏனையோர் மீளாய்விற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஐ-180]

## நயினை உற்சவத்தையொட்டி

# குமுதினிப் படகு மூலம் விசேட சேவைகள் நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூன். 17

நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்திற்கு செல்லும் பக்தர்களின் நன்மை கருதி வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் நடத்தப்பட்டுவரும் குமுதினிப்படகுச் சேவை எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரையுள்ள தினங்களில் குறிகாட்டுவானுக்கும்நயினாதீவுக்கும் இடையில் விசேட சேவையினை அடிக்கடி நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த விசேட ஏற்பாட்டின் காரணமாக குமுதினிப் படகு தனது வழமையான சேவையினை (ஊர்காவற்றுறைக்கும் நெடுந்தீவுக்கும் இடையில்) மேற்குறிப்பிட்ட தினங்களில் ஊர்காவற்றுறையிலிருந்து காலை 8.00 மணிக்கு ஆரம்பித்து மீண்டும் பிற்பகல் 6.30 மணிக்கு ஊர்காவற்றுறையை வந்தடையும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப் பணிப்பாளர் செ. ஐ. றெ. குருஸ் அறிவித்துள்ளார்.

(ஐ)

# அளவெட்டியில் அமைக்கப்பட்ட சந்தை இயங்கவில்லை

அளவெட்டி, ஜூன் 17

அளவெட்டி வடக்கில் புதிதாகக் கட்டப்பட்ட இறால் மடம் சந்தைக்கான கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்து ஆறு மாதங்களைக் கடந்து விட்ட நிலையிலும் சந்தையை இயங்க வைக்க எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிய வருகின்றது.

அளவெட்டி சிறுவிளான், பன்னாலைப் பகுதி மக்களின் பிரதான சந்தையாக இச் சந்தை விளங்கி வருகின்றது.

கடந்த கால இராணுவ நடவடிக்கை காரணமாக, முற்றாக அழிந்து போயுள்ள நிலையிலிருந்த இச் சந்தை, அரசசார்பற்ற தொண்டர் அமைப்பு நிறுவனமொன்றின் உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ள போதிலும் இயங்காமல் இருப்பதால் இப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[ஐ 13]

# கலை அரங்கு அமைப்பு

வடமராட்சி, ஜூன் 17

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய விளையாட்டு மைதானத்துக்கு சுற்றுமதிலும், கலை அரங்கு ஒன்றும் அமைக்கப்படவுள்ளன.

இவற்றுக்கென கல்வி அமைச்சு ஐந்து லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

(ஐ-173)

# சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கத் திட்டம்

அளவெட்டி, ஜூன் 17

அளவெட்டி மேற்கு முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தினர் தமது அங்கத்தவர்களின் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்புச் செய்யும் நோக்குடன் சீட்டிழுப்பு முறையிலானசேமிப்புத்திட்டமொன்றினை அறிமுகம் செய்துள்ளனர்.

தினசரி அங்கத்தவர் ஒருவரிடம் இரண்டு ரூபா வீதம் அறவிட்டு, பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் வங்கி அதிகாரிகள், சமூக சேவையாளர்கள், கிராம அலுவலர்கள், உத்தியோகத்தர்கள் முன்னிலையில் சீட்டிழுப்பு நடத்தப்பட்டு நாலு பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

தெரிவாகும் பயனாளிகளுக்குரிய பணம் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பில் இடப்பட்டு வங்கிப் புத்தகம் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் பல புதிய நிதியத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படஉள்ளதாக நிலையச் செயலாளர் செ. பிறேமன் தெரிவித்தார்.

(ஐ-13)

# வல்வெட்டித்துறையில் தொழுநோய் ஆய்வு

வடமராட்சி, ஜூன் 17

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடிப் பகுதியில் தொழுநோய் ஆய்வு நாளை வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்படவுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். செல்வரத்தினம் இந்த ஆய்வினை மேற்கொள்வார்.

ஆய்வின் போது ஆதிகோவிலடி கிராம மக்கள் தொழுநோய்ப் பரிசோதனைக்கு உட்படுத்தப் படுவார்கள்.

ஆய்வின் போது தொழுநோய் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டால் உடன் வைத்திய கிசிச்சை வழங்கப்படும்.

இதேவேளை—

தொழுநோய் சம்பந்தமான கருத்தரங்குஒன்று ஆதிகோவிலடிசனசமூகநிலையமண்டபத்தில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பிரதம பொது சுகாதாரப் பரிசோதகரால் நடத்தப்பட்டது.

(ஐ173)

# நெடுந்தீவில் விவசாய சம்மேளனம்

நெடுந்தீவு, ஜூன் 17

நெடுந்திவு பகுதியில் உள்ள விவசாயச்சங்கங்கள் இணைந்து விவசாய சம்மேளனத்தை அமைத்துள்ளன.

அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் கிராம அலுவலர்கள் ப. கதிரேசு, ந. நடராசா ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

(இ - 111)

# சைக்கிள் திருட்டு

நெல்லியடி, ஜூன் 17

மந்திகை மருத்துவ மனை வளவில் விடப்பட்ட புதிய சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை காலை இடம்பெற்றது. பருத்தித்துறையைச் சேர்ந்த க, லோகநாதன் என்பவரின் சைக்கிளே இவ்விதம் திருடப்பட்டுள்ளது,

இது குறித்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் புகாரிடப்பட்டுள்ளது.

(ஐ-109)

# விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணம் காளிகோயிலடி ஞானக்குழந்தை இல்ல பாலர் கல்விக் கழகத்தினரால் நடத்தப்படும் ஏழாவது வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2-30மணிக்கு செல்வி வேலுப்பிள்ளை உஷா தேவி தலைமையில் ஐயனார் கோயிலடியில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை அதிபர் த. அழகரத்தினமும் சிறப்பு விருந்தினராக பாலர் கல்விக் கழகத் தலைவர் இ. தவகோபால், பாலர் கல்விக் கழகச் செயலாளர் திருமதி தெ. இரத்தினகோபால் ஆகியோர் கலந்து கொள்வர்.

போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் இந் நிகழ்வின் போது வழங்கப்படவுள்ளது (ஐ-ரி)

# ஆசிரியர் கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, ஜூன் 17

சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயற்பாடுகள் அடிப்படையிலான வாய்மொழி - ஆங்கிலம் - கருத்தரங்கும் செயலமர்வும் எதிர் வரும் சனிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். தரம் ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இதில் கலந்து கொள்ள வேண்டும் என்று வலிகாமம் வலய ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.எம். முத்துராசா அறிவித்துள்ளார்.

(ஐ-142)

# கார்கிலில் பிரச்சினைக்கு ஜெயலலிதாவே காரணம்

## குமாரமங்கலம் கூறுகிறார்

திருச்சி, ஜூன் 17

போர் நடந்துகொண்டிருக்கும்போது எந்த ஒரு நாடும் பாதுகாப்புஅமைச்சரை ராஜினாமாச் செய்யுமாறு கோரமாட்டாது. கார்கிலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குக் காரணமே ஜெயலலிதா தான்.

மத்திய எரிசக்தி அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸைப் பதவி விலகவேண்டும் என அ. தி. மு. க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா வலியுறுத்தி வருகின்றார்.

இதற்குப் பதிலளிக்கும் முகமாகவே குமார மங்கலம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது கார்கிலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குக் காரணமே ஜெயலலிதாதான்.

மத்தியில் இருந்த வாஜ்பாய் அரசைக் கவிழ்த்து ஸ்திரமின்மையை ஜெயலலிதா ஏற்படுத்தினார். இதன் மூலம் கார்கிலில் எதிரிக்கு ஒரு வாய்ப்பை ஜெயலலிதா தேடிக் கொடுத்திருக்கிறார்.

சண்டை நடந்துகொண்டிருக்கும்போது எந்த ஒரு நாட்டிலும் பாதுகாப்பு அமைச்சரை இராஜினாமாச் செய்யக் கோரமாட்டார்கள். ஆனால், ஜெயலலிதா ராஜினாமாச் செய்யும்படி அறிக்கை விட்டிருக்கிறார்.

ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மீது குற்றம் குறை இருந்தாலும் போர் முடிந்த பிறகு தான் கூறவேண்டும், இப்போது கூடாது. போர் முடிந்த பிறகு விசாரணை கூட நடத்தக் கோரலாம்.

சலசலப்பை உருவாக்கும் வகையில் அறிக்கைகள் விடக் கூடாது. இத்தகையவர்களைத் தேச விரோதிகள் என்றே சொல்லலாம்.

ஜெயலலிதாவுக்குப் பொறுப்போ, பொறுமையோ இல்லை. முதலில் நம்நாட்டில் ஊடுருவியுள்ள எதிரியை வெளியேற்ற வேண்டும். இதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் இப்படிக் குமார மங்கலம் கேட்டுக் கொண்டார்.

(இ-க)

# நவாஸ் ஷெரீப்புடன் பேசுமாறு வாஜ்பாயிடம் கிளின்ரன் வற்புறுத்து

## உலக அரங்கில்

வாஷிங்ரன், ஜூன் 17

காஷ்மீர் மோதலைத் தவிர்க்க நவாஸ் ஷெரீப்புடன் நேரடிப் பேச்சுக்களைத் தொடங்கவேண்டும் என அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் இந்தியப் பிரதமர் வாஜ்பாயிடம் வலியுறுத்தி உள்ளார்.

நேற்று முன்தினம் அதிபர் கிளின்ரனுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வாஜ்பாய் பேசியபோதே கிளின்ரன் இவ்வாறு தெரிவித்தார்.

ஜம்மு-காஷ்மீர் பிரச்சினை இரு தரப்பினராலும் தீர்க்கப்படவேண்டியது. ஆதலால் நேரடிப் பேச்சுவார்த்தை மேற்கொள்வது என்பது அவசியமான ஒன்று எனவும் கிளின்ரன் தெரிவித்தார்.

கார்கில் பகுதி பிரச்சினைகள் தொடர்பாக இந்தியா கையாண்டு வரும் நடவடிக்கைகளைக் கிளின்ரன் பாராட்டியுள்ளார்.

(இ-க)


ஐங்கரன் தொலைத் தொடர்பு சேவை

AINGARAN

Tele Communication Service

மஞ்சவனப்பதி வீதி. கொக்குவில் மேற்கு, கொக்குவில்,

நாளை 18-06-1999 வெள்ளிக்கிழமை மு.ப. 11.27 முதல் நண்பகல் 12.00 வரை உள்ள சுபவேளையில் தனது சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

தொலைபேசி இலக்கம்

உள்நாடு: 021-3093

வெளிநாடு: 0094-21-3093

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகி

திருமதி இ. இராசலிங்கம்.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(66664)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கல்வயல் அந்திய காலச் சேவைகள் சங்கத்தில் பாவனையிலிருந்து அழகிய வேலைப்பாடுகளமைந்த பிரேத ஊர்தி விற்பனைக்கு உள்ளது. ரயர் சில்லுகளுடன் மேலதிக சில்லும் உண்டு கல்வயல் கலைமகள் சனசமூக நிலையத்திற்கு முன்னால் பார்வைக்கு விடப்பட்டுள்ளது. தொடர்பு:- க. விநாயகமூர்த்தி தலைவர் அல்லது சி. அம்பிகாபதி கல்வயல், சாவகச்சேரி. (c.7909)

நல்ல நிலையிலுள்ள தமிழ் தட்டெழுத்து இயந்திரங்கள், ஒலம்பியா ரெமிங்டன் மற்றும் றோணியோ மெஷின் (Gestetner) விற்பனைக்குண்டு. தொடர்பு: R. மருதம், 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். [66635]

### கடை வாடகைக்கு

கம்பஸ் சந்தி, பலாலி வீதியில் நல்ல நிலையில் உள்ள கடை வாடகைக்கு உண்டு. மேலதிக விவரம் பெற கம்பஸ் சந்தி, பலாலி வீதியிலுள்ள வேல்ஸ் லோன்றியுடன் தொடர்பு கொள்ளவும். [66620]

### மணமகள் தேவை

B. Sc. கம்பியூட்டர் எஞ்சினியர், ஆஸ்திரேலியாவுக்கும், கம்பியூட்டர் எஞ்சினியர் கனடாவுக்கும், M. Sc. ஆஸ்திரேலியா 1970 ஆண்டு எஞ்சினியருக்கும் படித்த மணமகள்கள் தேவை. 1967 ஆம் ஆண்டு லெக்ஸரர் செவ்வாய்க் குற்றம் உள்ள ஆணுக்கும் பட்டதாரி மணமகள் தேவை. அபிராமி திருமண சேவை, ஆடியபாதம் சந்தை வீதி, 1 ஆம் ஒழுங்கை, கொக்குவில். (66659)

### தேவை

கொழும்பில் வசிக்கும் பெண் டாக்டர் ஒருவரின் வீட்டிற்கு சைவ உணவு தயாரிக்கக் கூடிய 18 — 25 வயதிற்குட்பட்ட பெண் உதவியாளர் தேவை. தகுதியானோர் விண்ணப்பிக்கவும். தொடர்பு: விளம்பர இல. 892, C/o உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (66638)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு. எம். வி. முத்துராசா

(ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வலிகாமம் கல்வி வலயம்)

எமது கல்லூரியின் பழைய மாணவரும், ஆசிரியருமான

**திரு. எம். வி. முத்துராசா**

அவர்கள் வலிகாமம் கல்விவலய ஆங்கில பாட உதவிக்கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- ஆசிரியர் கழகம்

யா / அச்சுவேலி மகா வித்தியாலயம்,
அச்சுவேலி

(சி/7916)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 05 — 01 — 1940 மறைவு 17 — 05 — 1999

## அமரர் கதிரவேலு இரத்தினம்

(வாகனம் திருத்துநர் - நெல்லியடி)

எம்து குடும்பத்தின் ஒளிவிளக்காய் எங்கள் இதயமெலாம் நிறைந்திருக்கும் அன்புத்தெய்வமே! உங்களது நினைவுகள் எங்கள் மனதைவிட்டு என்றும் அகலாது! உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாருக்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மற்றும் பல வகைகளிலும் உதவிய அனைவருக்கும் எங்கள் இதய பூர்வ நன்றியைத் தெரிவித்துக்கொண்டு 18 – 06 – 99 (வெள்ளி) நாளை நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மற்றும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன வைபவத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குருக்கட்டு,
கரணவாய் தெற்கு.

(சி/7914)

---

அச்சுவேலி

# நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோயில் மகோற்சவ விஞ்ஞாபனம் -- 1999

ஆனித் திங்கள் 4 ஆம் நாள் (18-06-99) வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் மகோற்சவம் நடைபெறும்,

**விசேட உற்சவ கிரியா காலங்கள்**

| | |
|---|---|
| 18–06–99 | வெள்ளி – கொடியேற்ற உற்சவம் பகல் 10 மணி |
| 22–06–99 | செவ்வாய் – உருத்திரநாயகி உற்சவம் மாலை 4 மணி |
| 27--06–99 | ஞாயிறு – மஞ்ச உற்சவம் மாலை 4 மணி |
| 02--07--99 | வெள்ளி – அமிர்தவல்லி, சுந்தரவல்லி உற்சவம் மாலை 4 மணி |
| 06--07--99 | செவ்வாய் – தெண்டாயுதபாணி உற்சவம் பகல் 10 மணி (மாம்பழத் திருவிழா) |
| 09--07--99 | வெள்ளி – கார்த்திகை உற்சவம் மாலை 4 மணி |
| 10--07--99 | சனி – சப்பற உற்சவம் மாலை 4 மணி |
| 11--07--99 | ஞாயிறு – இரதோற்சவம் பகல் 10 மணி |
| 12--07--99 | திங்கள் – தீர்த்தோற்சவம் பகல் 10 மணி |
| 13--07--99 | செவ்வாய் – பூங்காவன உற்சவம் மாலை 4 மணி (திருக் கல்யாணம்) |
| 14--07--99 | புதன் – வைரவர் உற்சவம் மாலை 4 மணி. |

-- ஆலய தர்மகர்த்தா

காட்டுமலை வீதி, நாவலம்பதி, அச்சுவேலி. (சி/7915)

---

# எள், சணல் இம்முறை அமோக விளைச்சல்

சண்டிலிப்பாய், ஜூன் 17

கட்டுடை, சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் இம்முறை எள்ளுச் செய்கை நல்ல விளைச்சலைத் தந்துள்ளது.

கோடைமழை அடிக்கடி பெய்ததால் வயற்காணிகளில் விதைக்கப்பட்ட எள், பயறு, சணல் ஆகியன செழித்து வளர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை— முற்றிய நிலையிலுள்ள எள்ளுக் காணிகளில் கிளிகள் கூட்டம் கூட்டமாக வந்து எள்ளை அழித்து தொல்லை தருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

கிளிகளைக்கலைப்பதற்காக காணிகளில் பகல் வேளைகளில் இவர்கள் நின்று காவல் காத்து வருகின்றதை காணக் கூடியதாக இருக்கிறது.

(ஐ – 135)

---

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

# ஆதனவரி அறிவித்தல்

1999 ஆம் ஆண்டு 2 ஆம் கந்தாயத்திற்கான ஆதனவரியை 30—06—99 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமும் இன்றி அலுவலகத்தில் செலுத்தலாம் எனவும் குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ் விவரப்படி வெலியாத்துப் பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத் தருகிறேன்.

வெற்றுக்காணிகள் மற்றும்
குடியிருப்புக் காணிகள் — 15%
ஏனைய காணிகள் — 20%

காசோலையாக செலுத்துவோர் 'மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்' என எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை,
யாழ்ப்பாணம்,
15—06—1999.

[சி/7917]

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சின்னக்குட்டி பரராஜசேகரம்

(உரிமையாளர் சேகர் சவுண்ட் அன்ட் மியூசிக்)

தோற்றம் 10 – 08 – 1937 மறைவு 19 – 05 – 1999

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் (18 - 06 – 1999) நாளை வெள்ளிக்கிழமை பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

– குடும்பத்தினர்

சேகர் சவுண்ட் அன்ட் மியூசிக்,
6, கடுக்காயடி லேன்,
நல்லூர், யாழ்ப்பாணம். (66607)

---

உ

## நாளை (18 - 06 - 1999) சுழிபுரம் - பறாளாய்

# ஈசுர விநாயகரின் வேட்டைத் திருவிழா

தென்னாடுடைய சிவனே போற்றி! நம் நாட்டவர்க்கு ஈசுர விநாயகா போற்றி!!

- சோழியூரான் பிறைசூடிக்குரு

(66670)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடு உற்சவகாலப் பணிமனையில் ஆயுதபாணிகளாகவே பொலிஸார்!

## தேவாலயத்தினரின் கோரிக்கை நிராகரிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 17
மடுமாதா உற்சவ காலத்தில் தேவாலய பிரதேசத்தில் அமையவிருக்கும் பொலிஸ் நிலையத்தில் பொலீஸார் ஆயுத பாணிகளாகக் கடமையாற்றக்கூடாது என்று மன்னார் ஆயர் வந்தனைக்குரிய இராயப்பு யோசப் கேட்டுள்ளார்.

மடு மாதா உற்சவம் எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 15 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றது,

உற்சவ கால ஏற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று முன்தினம் மடுத் தேவாலய மண்டபத்தில் மன்னார் மாவட்ட செயலாளர் எஸ். எம். குரூஸ் தலைமையில் கூட்டமொன்று நடைபெற்றது.

மடுமாதா உற்சவம் வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்ட உற்சவம் என்பதால் சட்டம், ஒழுங்கு என்பவற்றை நிலைநாட்டுவதற்காக பொலீஸ் நிலையம், நீதிமன்றம் என்பனவும் உற்சவ காலத்தில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

அதே நேரம் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட மடுத் தேவாலய பங்குத் தந்தை வணக்கத்துக்குரிய பிதா ஏ. தேவசகாயம், ''தேவாலய பிரதேசத்தில் அமையவிருக்கும் பொலீஸ் நிலையத்தில் பொலீஸார் ஆயுதபாணிகளாகப் பணியாற்றக் கூடாது'' என்ற ஆயரின் கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை சமர்ப்பித்தார்.

ஆனால் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் —

பொலீஸார் ஆயுதபாணிகளாகவே பணியாற்றுவார்கள் என்றும் — கூட்டத்தில் கலந்து கொண்ட பொலீஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படாத நிலையில் கூட்டம் முடிவடைந்தது. (ஐ-21)

## நல்லூர்ப் பிரதேசபிரிவில் 645 பேருக்கு கொடுப்பனவு

வலி. கிழக்கு, ஜூன் 17
நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள குடும்பங்களுக்கான மீள் குடியமர்வுக் கொடுப்பனவு 5 ஆயிரம் ரூபா மேலும் 645 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

கொடுப்பனவுகளைப் பெற உள்ளவர்கள் தத்தமதுகிராம உத்தியோகஸ்தருடன் தொடர்பு கொண்டு வங்கி மூலம் பணத்தினைப் பெற முடியும் என பிரதேசசெயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப் பிரதேச செயலர் பிரிவில் இதுவரை 12 ஆயிரம் குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஐ-180)


IN EVERLOVING MEMORY
of



Lion S. T. CHARI
(Principal Emeritus, Manipay Hindu College)
Departed on 17th June 1987

A Guiding Light,
A Voice All Loved,
A Friend to All. Now
A Place Vacant
Which No One Can Fill.

Fondly remembered by
Dear and Loved Ones,
And Sincere Friends.

C. Balakrishnan

Lawton Road,
Manipay. (66653)



**தேவை**

யாழ். நகரில் விளம்பர ஸ்தாபனமொன்றிற்கு எழுதுவினைஞராக பணிபுரிவதற்கு G.C E. O/L படித்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் அல்லது நேரில் சமுகமளிக்கவும்.

**செனித் மார்க்கட்டிங்.**
19/3, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி.
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை) (66661)


## பாடசாலைகளை திருத்த நிதி உதவி

தென்மராட்சி, ஜூன் 17
பளை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை வகுப்பறைகள் திருத்த வேலைக்கென மாகாணக் கல்வி அமைச்சும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகமும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளன.

மாகாண கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பளை மத்திய கல்லூரி, சோரன்பற்று கணேசா வித்தியாலயம், மாசார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றிலும்—

அகதிக்களுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் நிதி ஒதுக்கீட்டில் பளை றோமன் கந்தோரிக்க பாடசாலை, முகாவில் அ. த. க. பாடசாலை ஆகியவற்றிலும்—

திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தென்மராட்சி கல்வி வலய வேலைப் பகுதியினரால் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)


**கொக்குவில் நந்தாவில்**
**கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய**
**வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்**

| | | | | |
|---|---|---|---|---|
| கொடியேற்றம் | 18 - 06 - 99 | வெள்ளிக்கிழமை | பகல் | 10.00 மணி |
| கைலாயவாகனம் | 24 - 06 - 99 | வியாழக்கிழமை | மாலை | 4.30 மணி |
| சப்பறத்திருவிழா | 26 - 06 - 99 | சனிக்கிழமை | மாலை | 4.30 மணி |
| தேர்த்திருவிழா | 27 - 06 - 99 | ஞாயிற்றுக்கிழமை | காலை | 7.00 மணி |
| தீர்த்தோற்சவம் | 28 - 06 - 99 | திங்கட்கிழமை | காலை | 7.00 மணி |

குறிப்பு: கொடியேற்றம் அன்றும் தேர்த்திருவிழா அன்றும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

- ஆலய பரிபாலன சபை.

நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்,
கொக்குவில். (அ/7912)


## சமய சந்நிதிகளில்

புன். கட்டுவன் ஜூன் 17
புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைசித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

இந்த ஆலயத்தின் மகோற்சவத்தை முன்னிட்டு கணேசா சனசமூகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சமய பாடப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் தேர்த்திருவிழாவன்று வழங்கப்படும், (க-133)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 17
இணுவில் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும்.

ஜூலை மாதம் 17 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும். (க-3.135)

★ ★ ★

மல்லாகம் கோணப்புல ஞானவைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-86)

★ ★ ★

கொக்குவில், ஜூன் 17
கொக்குவில் மாத்தனைக் கந்தசாமி கோயில் வருடாந்த மகோற்சவம் கடந்த 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க-69-30)

★ ★ ★

நீர்வேலி செல்லக்கதிர்காம சுவாமி கோயிலின் வருடாந்த உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 27 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க-110)

★ ★ ★

சண்டிலிப்பாய், ஜூன் 17
மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலைய வருடாந்த உற்சவம் கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

நாளை மறுதினம் சனிக்கிழமையன்று பிற்பகல் 4 மணிக்கு நற்கருணை திருவிழா நடைபெறும். எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு யாழ். மறை மாவட்ட ஆயர் அதி வந். தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை திருப்பலியை ஒப்புக்கொடுப்பார். அதனை அடுத்து திருச்சுருப பவனி நடைபெறும். (க-135)

★ ★ ★

தொல்புரம் வழக்கம்பரை அருள்மிகுஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலின் வருடாந்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் 11 தினங்கள் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர் வரும் 27ஆம் திகதியும் மறு நாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-30)

★ ★ ★

வலி. கிழக்கு, ஜூன் 17
ஏழாலை அம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம்கடந்த 12 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதியும், தீர்த்தத் திருவிழா மறுநாளும் இடம்பெறவுள்ளன. (க-180)

★ ★ ★

அச்சுவேலி நாவலம் பதி காட்டுமலைக் கந்தசாமி கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும். உற்சவத்தில் எதிர்வரும் ஜூலை 11 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (க-11)

★ ★ ★

கைதடி. ஜூன் 17
கைதடி கயற்றசிட்டி கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 27 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (க - 74 - 102)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ். வண்ணார் பண்ணை ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறும் உற்சவநிகழ்வில் எதிர்வரும் 27 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும், (க - 15)

★ ★ ★

கைதடி, தச்சந்தோப்பு அகோர மாகாளி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று புதன்கிழமை அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 நாள்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி கோவலன் — கண்ணகி கதை சிற்றுடுக்குப் பாடல் இசை நிகழ்வும், பொங்கலும் நடைபெற்று, சங்காபிஷேகத்துடன் உற்சவம் முடிவடையும். (க-74)

★ ★ ★

கொக்குவில், ஜூன் 17
கொக்குவில் கோணாவளை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் மணவாளக் கோல விழா இன்று வியாழக் கிழமை காலை 8.00 மணிக்கு சங்காபிஷேகத்துடன் நடைபெற்று முற்பகல் 11.30 மணிக்கு விஷேட பூசை நடைபெறும்.

பிற்பகல் 4. 00 மணிக்கு விஷேட பூசையைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வருவார். (க-69)

★ ★ ★

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் 30ஆம் திகதி புதன் கிழமை காலை 8.00 மணிக்கு வஷேட சங்காபிஷேகமும் நடைபெறும்.

கொடியேற்றதினம், தேர்த் திருவிழா ஆகிய நாள்களில் ஆலய பரிபாலன சபையினால் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க சிறுவர் நிறைவாழ்வு இல்லச் சிறார்களுக்கு மதிய போசனம் வழங்கப்படவுள்ளது. (க-69)

★ ★ ★

நல்லூர், ஜூன் 17
திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த மகோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

பன்னிரண்டு நாள்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-103)

★ ★ ★

சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயம் அண்மையில் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்களால் கிரியைகள் செய்யப்பட்டுப் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளது. [க-30]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## செல்லையா தங்கராஜன்

(வள்ளுவர்)

(முன்னாள் திருவள்ளுவர் அச்சக உரிமையாளர்)

திதி: 17 – 06 – 99

உடலால் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு நான்கு ஆனாலும் உணர்வால்
எம்முடன் வாழும் இதய ஜோதியே
உங்கள் புன் சிரிப்பும் கம்பீரநடையும்
ே ட்போர் உளங் கவரும் இனிய
உரையாடலும் கேட்கும் நாள் என்றோ
பாசமிடனணைக்க ஆறுதல் கூற
அன்புள்ளங்களுண்டு எனக்கு பப்பா என்றழைக்க
நீங்கள் இல்லையே உங்களைப்
பார்க்க பாரிஸ் நகரில் பாசமுடன்
காத்திருந்தோம் பாதிவழியில் பறந்தோடியதேன்
பப்பா? எம்முயிருடன் கலந்த அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப்பூக்களால் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், சகோதரன்,
சகலன்மார், மைத்துனர்மார்,
பெறாமக்கள், நண்பர்கள்.

புதிய செம்மணி வீதி,
நல்லூர்.

(66578)

# 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



## திருமதி வள்ளியம்மை கனகரட்ணம்

(சண்டிலிப்பாய்)

மலர்வு 03—05—1916

உதிர்வு 18—05—1999

ஆறாத துயரில் அமிழ்ந்து விட்டோம் அம்மா
மீளாத துயிலில் சென்று விட்டீாகளே ஆசை அம்மா
ஆறாக ஓடும் கண்ணீர் வற்றவில்லையே அம்மா
தேறுதல் கூறவும் நீங்கள் இல்லையே எம் அம்மா!

எமது தாயாரின் துயரச் செய்தி கேட்டு எம் இல்லம் நாடி வந்து அனுதாபம் தெரிவித்தும் ஆறுதல் கூறியும் எமது துன்பத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

க. பஞ்சலிங்கம்,
''தெய்வீகம்''
மானிப்பாய்.

[66633]

## மின் தடை

துன்னாலை கோவிற்கடவைப் பகுதியில் மின்சாரக் கம்பி மீது பனைமரம் ஒன்று வீழ்ந்ததால் அப்பகுதிக்கான மின்சார விநியோகம் கடந்த சில நாள்களாகத் தடைப்பட்டுள்ளது.

(ஐ–173)

## மெய்வல்லுநர் போட்டி

கைதடி, ஜூன் 17

கைதடி தெற்கு அறவழி கல்விப்பூங்காவின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி நாளைமறுதினம்சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி கல்விப்பூங்கா மைதானத்தில் கல்விப்பூங்கா வளர்ச்சிக் குழுத் தலைவர் பொ. செல்வராசா தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி தெங்குபனம்பொருள் அபிவிருத்திச் சங்கக் கல்வி உத்தியோகத்தர் இ. சௌந்தரநாயகமும் கௌர வவிருந்தினராக கு. சின்னப்பொடியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(க–74)

## எரிந்து காயம்

நெல்லியடி, ஜூன் 17

சமையலில் ஈடுபட்ட பெண் ஒருவரின் ஆடையில் தவறுதலாக தீ பற்றியதனால் அவர் முகம் முழுவதும் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை காலை 7 மணியளவில் பருத்தித்துறை செட்டித் தெருவில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த தங்கத்துரை — சாரதாதேவி (வயது 53) என்பவரே எரிகாயங்களுக்கு இலக்காகி மந்திகை மருத்துவ மனையிலிருந்து யாழ். போதனா மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

(ஐ-109)

## மந்திகைக்கு 3டாக்டர்கள் நியமனம்

நெல்லியடி, ஜூன் 17

மந்திகை மருத்துவ மனைக்கு மேலும் மூன்று தென்பகுதி டாக்டர்கள் கடமையாற்ற வந்துள்ளனர்.

மட்டக்களப்பு போதனா மருத்துவ மனையில் உள்ளகப் பயிற்சியை முடித்த டாக்டர்களான வி. அமரநாதன், ஜயசிங்க, ரணசிங்கா ஆகிய மூன்று டாக்டர்களும் கடந்த வாரம் முதல் மந்திகையில் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர்.

(ஐ–109)

## கும்பாபிஷேகம்

நல்லூர், ஜூன் 17

நல்லூர் அருள்மிகு ஸ்ரீசட்டநாதர் கோயில் நல்லைநாயகி சமேத நல்லைநாதப் பெருமானுக்கு புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும்.

கிரியைகள் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகும். எண்ணெக் காப்பு சாத்தும் வைபவம் 24ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையும் இடம்பெறும்.

[ஐ–103]

புலமைப் பரிசில்
பரீட்சை – 1999

இவ்வாரம்
19—6—1999 சனி
20—6— 1999 ஞாயிறு
இரு பரீட்சைகள்
நடைபெறும்.

BOND
யாழ்ப்பாணம்.

(66655)

**வேலை வாய்ப்பு**

**அலுவலக உதவி முகாமையாளர்**

பகுதி நேர அடிப்படையில் கடமையாற்ற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மகளிருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அடிப்படைத் தகுதிகள்:

★ ஆங்கில, சிங்கள மொழி தொடர்பாடலில் தேர்ச்சி.
★ கணனி தொழில் நுட்பம், தட்டச்சில் சான்றிதழும் அனுபவமும்.
★ அலுவலக முகாமையில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

விண்ணப்பங்கள் சுயவிவர கோவையுடன்-அனுபவ நற்சான்றிதழ்கள் பிரதியுடன் 20—06—1999 இற்கு முன்னர் கிடைக்கப்பெறல் வேண்டும். நேரடித் தொடர்புகள் வரவேற்கப்படாது. தகுதியுடையோர் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

விண்ணப்பங்கள் சேரல்:

திட்ட முகாமையாளர்,
பட்டினிக்கு எதிரான நிறுவனம்-A.C.F
05, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

(66479)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 13 — 07 — 1932

உதிர்வு 18 — 05 — 1999

## திருமதி கந்தையா சிதம்பரேஸ்வரி

(உரும்பிராய் ஈஸ்வரி)

திதி: சதுர்த்தி 17 – 06 – 99

''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்''

பெறலரும் சிவனடிப் பேற்றினையும் மீண்டும் பிறவாத பேரின்ப நிலையையும் நீங்கள் பெறவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

3 ஆம் கட்டை,
கட்டைப்பிராய்,
யாழ்ப்பாணம்.

(66658)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 29 — 10 — 1938

ஆண்டவன் அடியில் 19 — 05 — 1999

## திருமதி சண்முகலிங்கம் மகாலட்சுமி

கதைத்திருக்கக் காலனவன் பறிப்பான் என்று கணமேனும் நாம் நினைக்கவில்லையம்மா! கலகலப்பாய் பேசி மகிழ வைக்கும் உங்கள் கபடமற்ற உள்ளத்தைக் காண்பதெப்போ! துயரமது கண்டால் கண்ணை இமை காப்பதுபோல் காப்பதற்கு இவ்வுலகில் யாருளரோ! என்றென்றும் உங்கள் மலர்ந்த முகம் எமைவிட்டு நீங்காதம்மா! உங்கள் ஆத்மா சாந்தியடைய முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

(56637)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## குழந்தைகளின் பாதிப்பு

இலங்கையில் கடந்த பதினைந்து வருடங்களாக நடைபெற்று வரும் போரினால், போர்ச் சூழ்நிலைகளால் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒன்பது இலட்சம் குழந்தைகள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற புள்ளி விவரம் தெரிய வந்துள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாண குழந்தைகள் நலன்காப்புப் பணியகத்தின் பணிப்பாளர் கே. நடராசா, ஏறாவூரில் நூகம் அகதிமுகாமில் பேசுகையில் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

போர் நிலைமை காரணமாக வடக்கு—கிழக்கின் குழந்தைகள் உடல் உளரீதியாக மட்டும் பாதிக்கப்படவில்லை. குண்டுத் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள், வன்முறைகள், ஆயுத மோதல்கள் ஆகியவற்றை மட்டுமே கண்டு கொண்டிருக்கும் ஒரு தலைமுறை உருவாகிக் கொண்டிருக்கிறது. துள்ளித் திரியும் பருவத்தில் இக் குழந்தைகள் சோகத்தின் வடிவங்களாக நிற்கின்றனர் — என்றும் அவர் எடுத்துக்காட்டி உள்ளார்.

வடக்கு—கிழக்கில் வாழ்பவர்கள் சிறுபான்மையினரான தமிழர்களும் முஸ்லிம்களும் ஆவர். அவர்களின் குழந்தைகளே பாதிக்கப்பட்டுள்ளனர். அதிலும் தமிழ்க் குழந்தைகளே மிக மிக அதிகம். அக் குழந்தைகளின் வாழ்வையும், வளத்தையும் மேம்படுத்த அரச இயந்திரம் உகந்த முறையில் அக்கறையுடன் செயற்படுவதாக இல்லை.

அகதிமுகாம் வாழ்க்கை நீடிக்கும் வரை இக் குழந்தைகளின் வாழ்வியக்கம் இயல்பு நிலையில் ஒருபோதும் அமையாது, அதாவது அவர்களது வாழும் உரிமை பெரிய அளவில் பறிக்கப்பட்டு ஒரு வகையான அடிமை மனநிலையிலேயே சூழலிலேயே வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

மேலும் போர்ச் சூழலில் தொடர்ந்து இவ்வாறே வாழ்வதற்கு நேரிட்டால் அவர்கள் ஒரு வன்முறைச் சமூகத்தினராக மாறுவர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அகதிமுகாம்களில் வைத்து இவர்களுக்கு எவ்வகையான மேம்பாடான வசதிகளைச் செய்தாலும் கூட, அவர்கள் தமது பெற்றோருடன், தமது சொந்த வீடுகளில் வாழ்வது போன்ற மனத்திருப்தியும் வளர்ச்சியும் சுதந்திரமும் இருக்கமாட்டா. அவர்களது கல்வி வளர்ச்சியும் மிகப் பெரிய அளவில் பாதிப்புறும் அல்லது தடைப்படும்.

இப்போதைய தமிழர் சந்ததியை அழிப்பதோடும் அவர்களின் வாழ்க்கையை அகதி வாழ்க்கையாக்கிச் சீரழிப்பதோடும் மட்டுமன்றி, கொடூரமான இப்போதைய போர், எதிர்காலத் தமிழர் சந்ததியின் வாழ்க்கையையும் நாசமாக்குகின்றது.

போர் இப்போது நிறுத்தப்பட்டாற்கூட, இன்றைய குழந்தைகள் வளர்ந்து இளைஞர்களாகவும், பெரியவர்களாகவும் மாறும் இன்னும் பதினைந்து இருபது வருடங்களில் இப்போதைய பாதிப்பு பெரும் பாதகமான விளைவுகளையும், வித்தியாசமான ஒரு சமூகத்தையும் உருவாக்கும். அவ்வாறிருக்கப் போர் தொடருமாயின் அதன் பயங்கர விளைவுகளை நினைத்தும் பார்க்க முடியவில்லை.

இதனைக் கருத்திற் கொண்டாவது சர்வதேச நாடுகளும், சர்வதேச நிறுவனங்களும் போரை உடனடியாக நிறுத்துமாறு இலங்கை அரசுக்குக் காத்திரமான முறையில் அழுத்தம் கொடுக்க வேண்டும். குழந்தைகள் நலனில் அக்கறையுள்ள அமைப்புகள் ஒன்றிணைந்து இதனை முன்னெடுக்கலாம்.

# வளங்களும் வசதிகளும் குறைந்த தென்மராட்சிக் கல்வி வலயம்

## வாடகைக் கட்டடத்தில் பணிமனை; வந்து சேர்ந்த கணனி களஞ்சியத்தில்

கல்வித் திணைக்களத்தினால் புதிதாகக் கல்வி வலயங்கள் உருவாக்கப்பட்டபோதிலும் அவற்றுக்கான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாததால் கல்வி வலயப் பணிமனைகளும், கல்வி அலுவலர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வலயத்திற்குத் தேவையான அலுவலக இடவசதி, வாகன வசதி, ஆளணிகள், தொலைத் தொடர்பு வசதி, உபகரணங்கள் எவையும் பற்றாக்குறையாகவே அல்லது அவைஇல்லாத நிலையிலேயே இயங்கி வருகின்றன.

தென்மராட்சி கல்வி வலயத்தைப் பொறுத்தவரையில் நாவற்குழியிலிருந்து ஆனையிறவு வரையிலான பகுதிகளை உள்ளடக்கிய சுமார் 80 பாடசாலைகளைக் கொண்ட கல்வி வலயமாகும். கல்விப்பணிப்பாளருடன் நான்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், ஒன்பது உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கணக்காளர், வேலைப் பகுதியினர் மற்றும் கல்வி அதிகாரிகளையும் அலுவலகப் பணியாளர்களையும் உள்ளடக்கிய நிர்வாக அமைப்பைக் கொண்டதாகும்.

இந்த வலயம் தென்மராட்சி கல்வி வலயத்திற்கென நிரந்தரமான பணிமனைக் கட்டடம் இல்லாததால் மாதாந்தம் மூவாயிரம் ரூபா வாடகையில் தனியார் கட்டடம் ஒன்றில் தற்போது இயங்கி வருகிறது. கட்டட வசதிகள் போதாமையால்இரண்டு தற்காலிக கொட்டில்கள் அமைக்கப்பட்டு அதனுள்ளேயே பிரதிக்கல்விப் பணிப்பாளர்களும், உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் தமது நாளாந்தக் கடமைகளை மேற்கொள்கின்றனர்.

**செய்தி மடல்**

வலயத்திற்கென வாகன வசதிகள் இல்லாததால் பணிப்பாளர்கள் பாடசாலைகளுக்கு விஜயம் செய்யும் வேளைகளில் தமது சொந்த வாகனங்களையே (மோட்டார் சைக்கிள்கள்) பாவிக்க வேண்டியுள்ளது. சாவகச்சேரியில் இயங்கும் வலய அலுவலகத்திலிருந்து மாசார் அ. த. க. பாடசாலை 25 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ளதால் இப் பாடசாலைக்கு மாதத்தில் ஒருநாள் செல்வதற்குக்கூடப் பணிப்பாளர்கள் தயங்குகின்றனர். பயணத் தூரம் 50 கிலோ மீற்றருக்கு அதிகமாகும். அங்கு செல்லும்போது தமது வாகனங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்குத் தாமே பொறுப்பேற்கவேண்டும் என்பதால் இப் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ளனர்.

வலயத்தின் தேவைக்கென ஆரம்பத்தில் இரு தினங்கள் யாழ். கல்வித் திணைக்களத்தின் ''ஓட்டோ'' பயன்படுத்தப்பட்டது. ஆனால் அந்த ''ஓட்டோ''வும் தற்போது தீவக வலயத்திற்கு வழங்கப்பட்டுவிட்டதால் தென்மராட்சி வலயத்திற்கு வேறு வாகன வசதிகள் இதுவரை வழங்கப்படவில்லை.

### கணனிகள் களஞ்சிய அறையில்

வலயத்தில் கணனி வள நிலையம் அமைக்க ஐந்து கணனி இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும்

**ஐ. கிருஷ்ணன்**
தென்மராட்சிச் செய்தியாளர்

அவற்றை இபக்கத் தேவையான மின்பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) இல்லாததால் கணனிகள் களஞ்சிய அறையில் வைக்கப்பட்டுள்ளது.

வலயத்திற்கு தொலைத் தொடர்பு, பக்ஸ் வசதிகள் போட்டோஸ்ரட் இயந்திரம் ஆகியவை கிடைக்காததால் அலுவலகத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் தனியார் தொலைத் தொடர்பு நிலையங்கள் மூலமாகவே நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளன.

அத்துடன் அலுவலகத்தில் கடமையாற்றுவதற்கு எழுதுநர்கள், களஞ்சியப் பொறுப்பாளர் பதவிகள் வெற்றிடங்களாகவே உள்ளன. எனவே இக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு நிறைவானதொரு கல்வி வலயமாக செயற்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாகாண அமைச்சு முன்வர வேண்டும். ★

# அளவெட்டி கிராம அலுவலர் பிரிவில் பலகுளங்கள்புனரமைக்கப்படவில்லை

வலிகாமம் தெற்கு, ஜூன் 17

அளவெட்டி கிராமசேவையாளர் பிரிவில் உள்ள பல குளங்கள், புனரமைப்புச் செய்யப்படாமல் காணப்படுகின்றன.

அம்பனைக்குளங்கள் என அழைக்கப்படும் புல்லந்திக் குளம், பூதம்குளம், கட்டுக் குளம், பெரியதம்பிரான் குளம் ஆகிய நான்கு குளங்கள் புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளன.

மாரிகாலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதைத் தடுக்கவும் விரைவில் குளங்கள் நிரவி வெள்ளம் பயிர்ச்செய்கையினைப் பாதிக்காமல் இருக்கவும், கிராமங்களில் உள்ள வளவுகளில் வெள்ளம் நிறைந்து சிரமம்தராது இருக்கவும் இக்குளங்கள் விரைவில் ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் இடம்பெயர்ந்த காலங்களில் இக்குளங்களில் மண்நிறைந்தும் பற்றைகள், செடிகள் வளர்ந்தும் உள்ளன.

எதிர்வரும் மாரிகாலத்துக்கு முன்பாக இக்குளங்களைப் புனரமைக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் என பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-152)

# தமிழ்க்கட்சிப் பிரமுகர்கள் ஜனாதிபதியுடன் பேச்சு

கொழும்பு, ஜூன் 17

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நோக்கத்துடன் தமிழ் அரசியற் கட்சிகள் ஜனாதிபதியுடனும் எதிர்க் கட்சித் தலைவருடனும் பேச்சு நடத்துவதற்கு உத்தேசித்துள்ளன.

இன்னும் இரண்டு மூன்று வாரங்களில் இந்தப் பேச்சுக்கள் நடைபெறலாம் என்று ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற அங்கத்தவருமான டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற்றதன் காரணமாக அரசாங்கமும் ஐ. தே. கட்சியும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்து போதிய கவனம் செலுத்தவில்லை என்று தமிழ் அரசியற் கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

அடுத்த ஆண்டு தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்பதாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதன் அவசியம் பற்றி வலியுறுத்தப்பட இருப்பதாக தமிழ் அரசியற் கட்சிகள் கூறுகின்றன.

(ஐ-க)

# சாயி சிந்தனை

தெய்வத்தின் நாமம் எம்மை காத்து விடுதலை அளிக்கிறது. நாமம் குறிக்கும் ரூபத்தை அகக் கண்ணிலே கண்டு ஒழுங்காக ஜெபம் செய்யத் தொடங்கும் போது பல இடையூறுகளை எதிர் கொள்வீர்கள். மனம் சஞ்சலப்படும்— ஆசைகள் மோசம் செய்யும் இவற்றை அற்பமாகக் கருதி— அலட்சியம் செய்து அப்பாலே போக வேண்டும்.

கட்டுப்பாடு தளராது நில்லுங்கள். ஒழுக்கங்களில் உரம் கொள்ளுங்கள். நல்ல உள்ளம் படைத்தவர்களோடு இறைபற்று உடையவர்களோடு உறவு கொள்ளுங்கள்.

அடங்காத மாடு கயிற்றிலே பிணைக்கப்பட்டு வசமாக்கப்படுகின்றது. மூக்கு துளைக்கப்பட்டு, மூக்கணாம் கயிறு போடப்பட்டு நுகத்தடியில் கட்டிப் பழக்கப்படுத்தப்படுகிறது. பின்னர் அது எசமான் நினைத்தபடி அவனுக்கு [illegible] கனாகின்றது.

(ஆதாரம்: சத்ய சாயி பேசுகிறார்)

# நாளை

ஆனி 4
வெள்ளிக்கிழமை
திதி: பஞ்சமி
பிற்பகல் 4.54 வரை
நட்சத்திரம் ஆயிலியம்.
நண்பகல்: 11.50 வரை.
சுபநேரம்: 5.53 — 7.23
ராகுகாலம்: 10.23—11.53
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# கிரிக்கெட் மத்தியஸ்தர் தெரிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தில் புதிய மத்தியஸ்தர்களை இணைக்கும் நோக்குடன் வருடாந்தம் நடத்தப்படும் தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

இத் தெரிவுப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் கிரிக்கெட் ஆலர்கள் விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் என்றும், அன்றைய தினமே அனுமதி அட்டைகள் வழங்கப்படும் என்றும், சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ)

# விவசாயிகள் நிழல் மண்டபம்

வடமராட்சி, ஜூன் 17

கரணவாய் மூத்தவிநாயகர் கோயிலடியில் விவசாயிகள் நிழல் மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

ஆறு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இம்மண்டபத்தைக் கட்டுவதற்கான நிதியை கமநல சேவைத்திணைக்களம் ஒதுக்கீடு செய்துள்ளது.

அடுத்த மாதத்துக்குள் இக் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ-173)

### உதயவாக்கு

பிறரை நிந்தனை செய்வது மூலமாக ஒருவன் தனது மதிப்பைத் தேடக்கூடாது. தன்னுடைய நல்ல குணங்களினாலேயே ஒருவன் மேன்மையைத் தேடிக் கொள்ள வேண்டும்.

- பீஷ்மர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்மையில் வன்னியால் வந்த பலர் இருப்பிடம் தேடி அலைகின்றனர்

சண்டிலிப்பாய், ஜூன் 17

அண்மையில் கப்பல் மூலமும், குருநகர் இறங்குதுறை மூலமும் யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்த வலிகாமம் வடக்குப் பகுதியைச் சேர்ந்த பல குடும்பங்கள் இருப்பிடம் தேடி அலைகின்றன.

தங்கள் சொந்த இடங்களில் போய்க் குடியேற முடியாத நிலையில் இக் குடும்பங்கள் அல்லற் படுவதை நேரடியாக அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இவர்களில் மயிலிட்டியைச் சேர்ந்த 14 குடும்பங்கள் சுன்னாகம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் செயற்பட்டு வரும் சபாபதிப்பிள்ளை வீதி இடம் பெயர்ந்தோர் முகாமிற்குப் பக்கத்திலுள்ள பற்றைக் காணியொன்றில் தற்காலிகமாக சிறு குடிசைகள் அமைத்துக்கொண்டு வசித்து வருகின்றனர்.

''வன்னிப் பகுதியிலிருந்து வெளியேறி இங்கு வருவதற்காக மன்னார் பேசாலை அகதி முகாமில் நான்கு மாத காலம் தங்கியிருந்து விட்டு பின்னர் திருகோணமலைக்கு வந்து கப்பலுக்காக இரு வாரங்களுக்கு மேல் காத்திருந்தோம். கப்பல் மூலம் இங்கு வந்து சேர்ந்த எமக்கு நிம்மதியாக குடியிருப்பதற்கு வசதியான இடம் எதுவும் கிடைக்கவில்லை. கடைசியில் எமது சொந்தக் கிராமமான மயிலிட்டி வாசிகள் அதிகளவில் தங்கியிருக்கும் இம் முகாமிற்குப் பக்கத்திலுள்ள பற்றைக் காணியை துப்புரவு செய்து சிறு குடிசைகளை அமைத்து அதில் தங்கியிருக்கின்றோம்'' என்று இவர்கள் 'உதயன்' செய்தியாளரிடம் கவலையுடன் தெரிவித்தனர்.

''இங்கு வந்த பின்பு ஒரு முறை மட்டும் உலர் உணவு நிவாரணம் தரப்பட்டது. வேறு எந்த உதவிகளும் எமக்குத்தரப்படவில்லை. பட்டினியால் வாடும் நாங்கள் தொழில் ஏதாவது தேடிச் செய்ய விரும்பினாலும் தொழிலும் பெற முடியாதுள்ளது.

இதேவேளை பாதுகாப்புப் படையினரின் அடையாள அட்டை இன்னும் எமக்குக் கிடைக்காததினால் வேறு இடங்களுக்கு போக்குவரத்தும் செய்ய முடியாத நிலையில் இருந்து வருகின்றோம். அரச சார்பற்ற நிறுவனங்களாவது எமக்கு ஏதாவது உதவி செய்தால் நல்லது. மலசலகூடங்கள் எதுவுமில்லாது சிரமப்படுகின்றோம் என்று இவர்கள் மேலும் தெரிவித்தனர்.

(ஐ-135)


## பிற்போடப்பட்டுள்ளது

20-06-99 சமரபாகு தேவன்குறிச்சி அறிவகம் சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட இருந்த கலை நிகழ்ச்சி தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்பு அறிவிக்கப்படும்.

– நிர்வாகம்

அறிவகம் சனசமூக நிலையம்
தேவன் குறிச்சி,
சமரபாகு.

(சி/7918)



## இசை ஆசிரியர்களுக்கான அறிவித்தல்

யாழ். கல்விவலய இசை ஆசிரியர்கள் அனைவரையும் 20-06-1999 அன்று காலை 9 மணிக்கு தவறாது யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் ஒன்று கூடுமாறு அழைக்கின்றேன்.

இதில் இசைக் கலைஞன் ஒருவருக்கு விழா எடுப்பது சம்பந்தமான விடயங்கள் ஆராயப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

இசை ஆசிரியர்கள் சார்பாக
திருமதி பவானி லோகேந்திரம்

(சி/7922)



யா ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை, சுன்னாகம்

## வணிக நாதம் மலர் வெளியீடு

காலம்: 17-06-99 வியாழன் மு. ப. 10.00 மணி
இடம்: கல்லூரி பிரதான மண்டபம்

பிரதம விருந்தினர்:
திருமிகு T. இராஜரத்தினம் தம்பதிகள்
[பணிப்பாளர், உயர் தொழில் நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம்]
திருமதி சித்திரா இராஜரத்தினம்
[S. L. T. S—I]

அதிபர் உரை:
திருமிகு க. சிவாஜி

வாழ்த்துரை:
திருமிகு வீ. இராசையா
(கல்விப்பணிப்பாளர் – வலிகாமம் வலயம்)
திருமதி றெ. இருதயநாதன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலி. வலயம்)
திருமிகு அ. தற்பரானந்தன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர் பிரிவு II வலிகாமம் வலயம்)

வெளியீட்டுரை:
சி. சிவசரவணபவன் M. A. (சிற்பி)

மதிப்பீட்டுரை:
திருமிகு R. இரட்ணம்
(விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)

முதற்பிரதி பெறுபவர்:
வைத்திய கலாநிதி ம. மகேசன்

கலை வர்த்தக மாணவர் மன்றம்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.

(சி/7925)


## ஸ்தாபகர் சிலைக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 17

கந்தரோடை ஸ்கந்தவரோதயக்கல்லூரியின் ஸ்தாபகர் சி. கந்தையா உபாத்தியாயரது முழு உருவச்சிலை கல்லூரி வளாகத்தில் நிறுவுவதற்குகல்லூரியின்கொழும்பு பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இன்று வியாழக்கிழமை மு. ப. 10 மணியளவில் கல்லூரி அதிபர் திரு. க. சிவாஜி தலைமையில் அடிக்கல் நடும் வைபவம் நடைபெறவுள்ளது. (ஐ)

## நோயாளர் கப்பல் சேவை ரத்து

யாழ்ப்பாணம், ஜூன் 17

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை முன்னர் தெரிவிக்கப்பட்டது போல் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் கொழும்புக்குபயணம்செய்யஅனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்கள் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை வைத்தியசாலைப் பணிப்பாளரைச் சந்தித்து பயணத்திற்கான புதிய திகதியை அறிந்து கொள்ளும் படி வைத்தியசாலைப்பணிப்பாளர்கேட்டுள்ளார். (ஐ-ரி)


## A/L நாடகமும் அரங்கியலும்

குறு வினா விடை – 500
விற்பனையாகிறது!

தொகுப்பு: கந்தையா ஸ்ரீகந்தவேள் B.A. Dip. Ed.

கிடைக்குமிடம்:
பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 4, யாழ்ப்பாணம்.
தெஸ்பியன் கல்வி நிலையம், இணுவில்.

(66680)



உ

## நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயம் உதவி அர்ச்சகர் தேவை

மேற்படி ஆலயத்திற்கு நித்திய அபிஷேக, பிரசாதம், அர்ச்சனைகள் செய்வதற்கு உதவி அர்ச்சகர் தேவை. குடும்பஸ்தர் விரும்பத்தக்கது. வீடு வசதி செய்து கொடுக்கப்படும்.

விண்ணப்பதாரிகள் 21—06—1999 அன்று காலை 10.00 மணிக்கு ஆலயத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பிரயாணப்படி வழங்கப்படமாட்டாது.

–– பரிபாலன சபை

(சி/7924)


## மரண அறிவித்தல்

### நாகமுத்து சின்னையா

[இளைப்பாறிய சிவில் பொறியியலாளர், கட்டடத் திணைக்களம், கொழும்பு]

மாவிட்டபுரம் மடத்தடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து சின்னையா 15-06-99 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான கந்தையா, சிவகுரு [ஓவசியர்], தருமலிங்கம், நல்லையா, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுந்தரலட்சுமியின் அன்புக் கணவரும் சுசீலாதேவி [லண்டன்], சிறீரங்கன் [லண்டன்], மஞ்சுளா [லண்டன்] ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr. சாந்தகுமார் [லண்டன்], ஞானாம்பாள் [லண்டன்], Dr. கிருபரன் [லண்டன்] ஆகியோரின் மாமனாரும், ஆரணி, ஆர்த்தி, ஜனகன், சங்கவி, நந்தீஸ் ஆகியோரின் அன்புப்பாட்டனாரும், நடனேஸ்வரனின் [லண்டன்] அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-6-99) வியாழன் பி.ப. 3 மணிக்கு கொழும்பிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சின்னராசா
[மயிலணி, சுன்னாகம்]

கொழும்பு முகவரி:
51 1/1, பெரேரா ஒழுங்கை,
கொழும்பு - 6,
தொலைபேசி இல. 585799

[66657]


SVF

## ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

வர்ணப் புகைப்படச் சுருள் பிரதியாக்கலும் புகைப்படத்துறைப் பொருள்கள் விற்பனையும்

இதுவரை காலமும் வடமராட்சி, புலோலியில் எமது இல்லத்தில் இயங்கி வந்த புகைப்படச்சுருள் சேகரிப்பு நிலையம் யாழ். நகர், தென்மராட்சி, வலிகாமம் புகைப்படப் பிடிப்பாளர்களின் நலன் கருதி 545, பருத்தித்துறை வீதி, நல்லூர் (நல்லூர் ஆலயத்திற்கு முன்பாக) என்ற முகவரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- எம்மிடம் புகைப்படத்துறை சம்பந்தமான பொருள்கள் அனைத்தும் விற்பனைக்கு உண்டு.
- எம்மிடம் மகாபாரதம் (18 கசற்) ஸ்ரீ கிருஷ்ணா (28 கசற்) தொடர் வீடியோ படங்கள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இவற்றை வடமராட்சியில் பருத்தித்துறை ராஜன் வீடியோவிலும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ கிருஷ்ணா தொடரில் மேலும் மிகுதி தொடர்கள் மிக விரைவில் இந்தியாவில் இருந்து தருவித்துத் தரப்படும்.

ஸ்ரீ வல்லிபுரா போட்டோ
545, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[66642]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தமுருகேசனார் நினைவு தினம் வடமராட்சியில் அனுஷ்டிப்பு

வடமராட்சி, ஜூன் 17

புலோலியூர் அறிஞர் தமிழ் தாத்தா கந்தமுருகேசனாரின் 34 ஆவது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனை ஒட்டி மந்திகைச் சந்தி, புற்றளை மகாவித்தியாலயத்தடி ஆகிய இடங்களில் உள்ள அன்னாரின் திரு உருவச் சிலைகளுக்கும், பெரிய தேவன் சனசமூக நிலையத்தில் உள்ள உருவப் படத்துக்கும் மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் அன்னாரின் மாணாக்கர்களால் மேற்கொள்ளப்பட்டன.

மந்திகைச் சந்தியில் உள்ள சிலைக்கு யாழ். செயலக இணைப்பதிகாரி வீ. வீரபத்திரபிள்ளை, யாழ். செயலகக் கணக்கு ஆய்வு அதிகாரி எஸ். சற்குணம் ஆகியோர்கள் திலகமிட பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன், கந்தமுருகேசனார் நூல் வெளியீட்டுக் குழுத் தலைவர் வி. எஸ். ஏகாம்பரநாதன், புற்றளை சனசமூக நிலையத் தலைவர் எஸ். கதிர்காமத்தம்பி ஆகியோர் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்.

இவ்வைபவத்தில் யாழ். உள்ளூராட்சித் திணைக்கள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி பரமேஸ்வரி பொன்னையா, பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்க போஷகர் ஆர். உருத்திரர், பருத்தித்துறை பிரதேசசபை பிரதம நூலகர் ஏ. என். எஸ். திருச்செல்வம் ஆகியோரும் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களும், பொது மக்களும் கலந்து கொண்டனர்.

புற்றளை மகாவித்தியாலயத்துக்கு அருகில் உள்ள சிலைக்கு வித்தியாலய அதிபர் திருமதி சகுந்தலாதேவி இந்திரராஜா மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார் ஆசிரியர்கள், மாணவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பெரிய தேவன் சனசமூக நிலையத்தில் உள்ள உருவப் படத்திற்கு நிலையத் தலைவர் எஸ். யோகேந்திரன் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

(ஐ–173)

# முன்பள்ளி ஆசிரியர்களின் கருத்தரங்கு

குருநகர், ஜூன் 17

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட முன்பள்ளி பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு யாழ். வலயக் கல்வித்திணைக்கள முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக் கருத்தரங்கில் கலந்து கொள்ள வரும் முன்பள்ளி ஆசிரியர்கள் முன்பள்ளி தொடர்பாக பதிவு எண், அமைந்திருக்கும் இடம், மாணவர் எண்ணிக்கை, உதவி வழங்கும் நிறுவனம், ஆசிரியர் விவரம் போன்ற விவரங்களை உள்ளடக்கி கிராம சேவை அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களைக் கொண்டு வருமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார்.

(ஐ – 51)

## நீதிமன்றில்

# ஆஜர் செய்யப்பட்டு ஐவரும் விடுதலை

யாழ்ப்பாணம், ஜூன் 17

அரியாலை நெடுங்குளம் பகுதியில் கைதான ஐவரும் செவ்வாய்க்கிழமை மாலை அவரவர் உறவினர்களிடம், தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அதிகாரிகளால் ஒப்படைக்கப்பட்டிருந்தனரல்லவா?

நடராசா ஆனந்தராசா (23 வயது), அப்துல் ஜவார் கணேசன் (24 வயது), அருமைத்துரை நாகதீசன் (26 வயது), இராவுத்தர் செல்வமரிக்கார் (46 வயது), குணரட்ணம் கனிராஜ் (19 வயது) ஆகிய அந்த ஐவரும் செவ்வாய்க்கிழமை காலை மல்லாகம் மாவட்ட நீதிபதி இ. விக்னராசா முன்னிலையில் காங்கேசன்துறைப் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

ஐவர் மீதும் வழக்குத் தொடர்வதற்கு ஆதாரம் எதுவுமில்லை என்று பொலீஸார் தெரிவித்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து அவர்களை விடுதலை செய்ய உத்தரவிட்ட நீதிபதி, ஐவரையும் மனித உரிமைக்குழு அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு பணித்தார்.

அதன் பிரகாரம் மனித உரிமைக்குழு அதிகாரிகளிடம் இராணுவப் பொலீஸார் ஐவரையும் செவ்வாய்க்கிழமை மாலை ஒப்படைத்திருந்தனர்.

(அ)

# வங்கியில் கொள்ளை

கொழும்பு வத்தளை சந்தியில் உள்ள தனியார் வங்கி ஒன்று நேற்றுப் பிற்பகல் ஆயுததாரிகளால் கொள்ளையடிக்கப்பட்டது.

வெள்ளை வான் ஒன்றில் வந்த ஆயுதம் தாங்கிய 5 பேர் வங்கி ஊழியர்களை மிரட்டிவிட்டு வங்கியில் இருந்த 15 இலட்சம் ரூபாவை கொள்ளையடித்துச் சென்றனர்.

வத்தளை பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். [இ–6–21]

# புதைகுழிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தப் பணியை மேற்கொண்டிருந்த சமயம் புலனாய்வுப் பிரிவு வேலையும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

புலனாய்வுப் பிரிவு வேலைகளுக்கு கப்டன் லலித், கப்டன் ஸ்ரீ ஜெயவர்த்தனா ஆகியோர் உட்பட சில வீரர்கள் இந்தப் பிரிவில் இருந்தனர். அவர்களின் கீழ் நான் செயற்பட்டேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரியாலைப் பகுதியில் சுற்றிவளைப்பு ஒன்றைப் படையினர் நடத்தினோம். அந்தப் பகுதியில் உள்ள வீடுகளில் இருந்த சகலரையும் வெளியே அழைத்து வந்து நெடுங்குளம் என்னும் இடத்தில் ஒன்று சேர்த்து விசாரித்தோம்.

அந்தப் சந்தர்ப்பத்தில் அங்கு மேஜர் வீரக்கொடி, மேஜர் குணசேகரா ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர். அவர்கள் முகமூடி அணிந்த இருவரை அழைத்து வந்து அங்கு நின்ற பொது மக்கள் முன் நிறுத்தினர்.

அந்த இரு முகமூடி நபர்களும், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எனத் தெரிவித்து ஐம்பது பேரை அடையாளம் காட்டினர்.

அந்த ஐம்பது பேரும் வீடியோப் படம் எடுக்கப்பட்டதுடன் எம்மிடம் இருந்த பட்டியலுடன் அவர்களின் பெயர் விவரங்கள் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டன. பின்னர் அவர்களின் வீட்டு முகவரிகள் பெறப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிச் சந்தேக நபர்களைக் கண்டு பிடிக்க அந்த முகவரியின் படி முயற்சிகள் எடுக்கப்பட்டன.

அரியாலைப் பிரதேசத்தில் எவ்வாறு கைது செய்யப்பட்டார்கள்? எவ்வாறு கொல்லப்பட்டார்கள்? எங்கு புதைக்கப்பட்டார்கள்? என்ற விவரங்களை என்னால் நிச்சயமாகக் கூறமுடியும்.

அரியாலைப் பகுதியில் முதலில் கைதானவர்கள் தபால் கட்டுச் சந்தியில் 7 ஆவது கலாட் படையணிப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். கப்டன் ஸ்ரீஜெயவர்த்தனா தலைமையில் இயங்கிய 'சி' பிரிவிலும், அரியாலையில் உள்ள தயா கட்டடத்திலும் பலர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தனர்.

மற்றொரு தடுப்பு முகாம் தபால்கட்டைச் சந்தியில் இருந்து செல்லும் பாதையில் பாடசாலைக்கு அருகில் உள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னைய அலுவலகத்தில் இயங்கியது.

கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றும் செல்வரத்தினம் என்பவரைக் கைது செய்து 'சி' பிரிவு முகாமில் தடுத்து வைத்திருந்தனர். அவரைக் கப்டன் லலித், கப்டன்ஸ்ரீஜெயவர்த்தனா, லெப்டினன்ட் துடுகல்ல ஆகிய மூவரும் சேர்ந்து கைது செய்தனர்.

அவரை விடுவிக்குமாறு அவரது மனைவி, பிள்ளைகள் என்னிடம் கேட்டனர்.

இதையடுத்து அந்த முகாமுக்கு சென்ற சமயம் செல்வரத்தினம் உட்பட 25 பேர் அங்கு இருந்த அறை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இவர்களின் கால்கள் கட்டப்பட்டிருந்தன.

அங்கு கால்கள் கட்டப்பட்ட நிலையில் இருந்த செல்வரத்தினம் என்னைக் கண்டதும் தான் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு அற்றவர் எனத் தெரிவித்து தன்னை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு மன்றாட்டமாகக் கேட்டார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இல்லாதவர் என்பதால் அவரை விடுவிக்குமாறு கப்டன் லலித், கப்டன் ஸ்ரீ ஜெயவர்த்தன ஆகியோரிடம் கோரினேன். அவரை விடுவிப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால் அன்று இரவே அவரைக் கொலை செய்துவிட்டார்கள். மறுநாள் அங்கு நான் போனபோது அங்கு பத்துச் சடலங்கள் கிடந்தன.

## சித்திரவதை

மற்றொரு சம்பவத்தில் யோகேஸ்வரன் என்பவர் கடமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் தயா கட்டடத்தில் உள்ள முகாம் படையினர் அவரைக் கைது செய்தனர். அடுத்த நாள் அவரை 'சி' வதை முகாமுக்குக் கொண்டு சென்றனர். இந்த முகாம் கொட்டுக் கிணற்றடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள வீடுகளில் இருந்தது.

பிரஸ்தாப நபரை விடுவிக்குமாறு மேலிடத்தில் இருந்து கிடைத்த உத்தரவை அந்த முகாமுக்கு எடுத்துச் சென்றேன்.

அங்கு அவர் தலை கீழாகக் கட்டப்பட்டிருந்தார். பிளேட்டினால் அவரது உடலில் வெட்டிக் காயப்படுத்திக் கொண்டிருந்தனர். கப்டன் ஸ்ரீஜெயவர்த்தனா, லெப்டினன்ட் துடுகல்ல, உதயகுமார ஆகியோரே இந்தச் சித்திரவதையைச் செய்து கொண்டிருந்தனர்.

அந்தச் சித்திரவதை முகாமில் பாவித்த பொருள்கள் இப்போதும் அங்கு இருக்கின்றன.

அந்த முகாமில் இருந்த நபர் ஒருவரை பொல்லால் தாக்கி கொலை செய்து அங்குள்ள வீடு ஒன்றின் முன் புதைத்தார்கள்.

என்னுடன் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஏ. எஸ். பெரேராவை விசாரித்தால் அந்த வதை முகாம் தொடர்பாக மேலும் தகவல்கள் கிடைக்கும்.

## 'பாஸ்' பெற வந்தோருக்கு ஏற்பட்ட கதி

அரியாலையைச் சேர்ந்த பார்த்தீபன், சுதாகரன் என்ற இரு இளைஞர்கள் கைதடி சென்று வியாபாரம் செய்ய 'பாஸ்' பெற்றுத்தருமாறு என்னிடம் கேட்டனர். இது குறித்து கப்டன் ஸ்ரீ ஜெயவர்த்தனாவிடம் கேட்டேன். அவர்களை முகாமுக்கு வருமாறும் அங்கு வைத்து 'பாஸ்' வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தகவலை அந்த இளைஞர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் முகாமுக்குச் சென்றனர்.

மறுநாள் அந்த இளைஞர்களின் உறவினர்கள், அந்த இளைஞர்கள் இருவரும் இன்னும் வீட்டுக்கு திரும்பி வரவில்லை என்று என்னிடம் தெரிவித்தனர்.

அந்த இளைஞர்களுக்கு கைதடியில் வியாபாரம்செய்ய அனுமதிக் கடிதம் வழங்குவதாகத் தெரிவித்த கப்டன் ஸ்ரீ ஜெயவர்த்தனாலெப்டினன்ட் துடுகல்ல ஆகியோர் அந்த இளைஞர்கள் இருவரையும் தலை கீழாகக் கட்டித் தூக்கிவிட்டு தாக்கியதைக் கண்டேன். மறுநாள் இரு இளைஞர்களும் இறந்து விட்டனர்.

அரியாலை முகாமில் பணிபுரிந்தஅப்துல் நஸார், ஹமீத் சமரசிங்க ஆகியோர் நன்றாகத் தமிழ் கதைப்பார்கள். அந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றைக் காட்டுமாறு என்னிடம் அவர்கள் கேட்டனர்.

இரவு நேரத்தில் அந்த வீட்டைக் காட்டினேன். அங்கு ஓர் ஆணும் பெண்ணும் இருந்தனர்.

"அந்த வீட்டின் சொந்தக்காரர் எங்கே? என்று அவர்களிடம் கேட்டோம்.

"முன் வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று அவர்கள் பதில் அளித்தனர்.

அதையடுத்து கப்டன் லலித் ஹோவகேயும் அப்துல் நஸார் ஹமீத்தும் அந்த வீட்டுக்குச் சென்றனர். அங்கிருந்த இளம் தம்பதியினரைக் [illegible]. அவர்கள் முதலில் 'சி' வதை முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

பின்னர் இருவரையும் செம்மணியில் உப்பளப் பகுதிக்குக் கொண்டு சென்றனர்.

அவ்வாறு அவர்களைக் கூட்டிச் செல்லும்போது மண்வெட்டியை எடுத்து வரும்படி என்னிடமும், ஏ. எஸ். பெரேராவிடமும் கப்டன் லலித் ஹோவகே தெரிவித்தார்.

அதன்படி நாம் இருவரும் துப்பாக்கியுடன் மண்வெட்டியையும் கொண்டு சென்றோம்.

நான் செல்லும்போது இடையில் கப்டன் லலித் ஹோவகே அந்தப் பெண்ணுடன் தனிமையில் நின்றதைக் கண்டேன். அச்சமயம் அந்தப் பெண்ணின் உடலில் ஆடைகள் எதுவும் இருக்கவில்லை.

பின்னர் அந்தப் பெண்ணின் கணவன் இருக்கும் இடத்துக்குப் பெண்ணை அழைத்து வந்தனர். என்னிடம் இருந்த மண்வெட்டியை வாங்கிய கப்டன் லலித் ஹோவகே இருவரின் தலையிலும் அடித்தார். அவருடன் இருந்த அப்துல் நஸார், ஹமித், சமரசிங்க ஆகியோர் பொல்லுகளால் அவர்களைத் தாக்கினார்கள்.

இருவரும் கீழே வீழ்ந்துவிட்டனர். இருவரின் சடலங்களையும் புதைக்கும் படி கூறிவிட்டு அவர்கள் சென்றுவிட்டனர். நாம் அந்தச் சடலங்களைப் புதைத்தோம். அந்த இடத்தை என்னால் அடையாளம் காட்ட முடியும்.

அரியாலைப் பகுதியைப் பற்றி எனக்கு நன்குதெரியும். அங்குள்ள மக்களுடன் நன்றாகப் பழகியதால் என்னைப் பற்றி மக்கள் நல்லாகச் சொல்வார்கள்.

எனக்குத் தமிழ் தெரியாததால் எனது சிவில் நிர்வாகப் பணிகளுக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த குணரத்தினம் என்பவரைப் பயன்படுத்தி வந்தேன்.

அரியாலைப் பகுதிக்கு நான் கடமைக்கு வர முன்பு அங்கு 50 பேர் காணாமல் போயிருந்ததாக அறிந்தேன். அவர்கள் 'சி' முகாமில் தடுத்து வைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

கல்லூரி மாணவியான கிருஷாந்தியின் சடலம் என்னிடம் புதைக்கப்படுவதற்காக ஒப்படைக்கப்பட்டபோது அந்தச்சமயம் அது கிருஷாந்தியின் சடலம் என்று எனக்குத் தெரியாது.

வழமையாக உயர் அதிகாரிகள் பொதுமக்களைக் கொலைசெய்துவிட்டு சடலத்தை புதைக்கும்படி என்னிடம் தருவார்கள். நான் அவற்றைப் புதைக்க ஏற்பாடு செய்வேன்.

கிருஷாந்தி கொலையுடன் எனக்கு எந்தவித தொடர்பும் இல்லை, சடலத்தைப் புதைப்பதைத் தவிர.

இந்தக் கொலை தொடர்பாக உயர் அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருந்தனர். ஆனால் அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனக்கு மரண தண்டனை விதிக்கப்படுவதற்கு முன்பும் பின்பும் இதையே கூறினேன்.

கிருஷாந்தி கொலை வழக்கில் முறைப்பாட்டுக்காரர்களின் வாக்குமூலங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டன. ஆனால் எதிரிகளின் வாக்குமூலங்கள் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

## கொலைப் பயமுறுத்தல்

செம்மணியில் புதைகுழி இருப்பதாக நான் சாட்சியம் அளித்தால் எனது குடும்பம் கொலை செய்யப்படும் என்று அச்சுறுத்தல் கடிதங்கள் வந்தன. அவற்றை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கையளித்துள்ளேன்.

செம்மணி மற்றும் பகுதிகளில் உள்ள 10 மனிதப் புதைகுழி இடங்களை நான் அடையாளம் காட்டுவேன்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏ. எஸ். பெரேரா ஐந்து இடங்களைக் காட்டத் தயாராக இருக்கின்றார். அதில் ஒன்றில் மட்டும் 25 முதல் 30 வரையான சடலங்கள் ஒன்றாகப் போடப்பட்டு புதைக்கப்பட்டுள்ளன. மற்றுமொரு கைதியான ஜெயதிலகாவும் சில புதைகுழிகளை அடையாளம் காட்டத் தயாராக இருக்கின்றார்.

என்னால் சடலங்கள்புதைக்கப்பட்ட மூன்று இடங்களை தற்சமயம் அடையாளம் காட்ட முடியாது எனநினைக்கிறேன்.

இந்தச் சம்பவங்கள் நடந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. நான் வாக்கு மூலம் அளித்து ஒரு வருடமாகி விட்டது. ஆனால் அங்கு இருந்து எலும்புகள் எடுக்கப்பட்டதாக அறிகிறேன். இதற்காகவே மண் மாதிரிகளை எடுக்குமாறு கோரினேன்.

படையினரையோ, நாட்டையோ காட்டிக் கொடுக்க நான் வாக்கு மூலம் அளிக்கவில்லை. எனக்கு ஏற்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்கவும் சில இராணுவ அதிகாரிகளின் செயல்களை அம்பலப்படுத்தவுமே இந்த வாக்கு மூலத்தையளிக்கிறேன்.

எனக்கு இந்த நீதிமன்றத்தால் நீதி கிடைக்காமல் போனாலும் சர்வதேச நீதிமன்றம் மூலம் நீதி கிடைக்கும் என நினைக்கிறேன்—

இப்படி அவர் கூறினார்.

[இ–3–5–173]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



செம்மணிப் புதைகுழிகள் உள்ள பகுதிக்கு யாழ். மேலதிக நீதிவான் எம். இளஞ்செழியன் செல்கிறார்-



செம்மணிப் புதைகுழியைத் தோண்டும் பணியை சர்வதேச—உள்ளூர் பார்வையாளர்கள் அவதானிக்கின்றனர்,



சோமரத்ன ராஜபக்ஷ நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படுகிறார்.
படங்கள்:- எம், மணிவண்ணன்

# மாகாண மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள்

## இந்த வருடம் திருமலையில்

வடக்கு— கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் நடத்தப்படும்மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள் இந்த வருடம் திருகோணமலையில் நடைபெறவுள்ளன.

பெரு விளையாட்டுகள் இம்மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 3 ஆம் திகதி வரையும் தட கள விளையாட்டுகள் ஜூலை 6, 7, 8 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

இந்த விளயாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கென யாழ். மாணவர்களை கப்பல் மூலம் அனுப்ப எடுத்த முயற்சி இந்த வருடமும் பயனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தமது சொந்த முயற்சியில் இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் பிரயாணத்துக்கான அனுமதியை தமது பிரதேச இராணுவப் பிரிவினூடாகப் பெற விண்ணப்பிக்கும்படி சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது. (இ-5)

### ஒரு புதைகுழியையே...

(முதலாம் பக்கத் தொடர்)

டிய புதைகுழியில் இருந்து சடலங்கள் மீட்கப்பட்ட பின்னரே அவர் மீண்டும் செமணிம்க்கு அழைத்துவரப் படுவார் என்றும்—

அதுவரை அவர் யாழ். பொலீஸ் நிலையத்தில் வைக்கப்படுவார் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

அந்தப் புதைகுழியில் இருந்து சடலங்கள் மீட்கும்பணி இன்று பூர்த்தியடையாது விட்டால் நாளையும் அந்தப் பணி தொடரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-3-5-173)

# உயிலங்குளத்துக்குப் பதிலாக பாப்பாமோட்டை ஊடாக பாதை

வவுனியா, ஜூன் 17

இராணுவக் கட்டுப்பாடற்றதான வன்னிப் பகுதிக்கும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குமான உயிலங்குளம் ஊடான போக்குவரத்துப் பாதை மூடப்பட்டு மன்னார் பூநகரி வீதியில் உள்ள பாப்பாமோட்டை ஊடாக புதிய பாதை ஒன்று திறக்கப்படவுள்ளது.

போர்க்கோஷம்-4இராணுவ நடவடிக்கை மூலம் விடத்தல் தீவு வரையான பிரதேசம் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததை அடுத்து புதிய பாதையை திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தள்ளாடி இராணுவ முகாமில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது மன்னார் இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் ரஞ்சித் டி. சில்வா இத்தகவலைத் தெரிவித்தார்.

இதன் காரணமாக உயிலங்குளம் பாதையில் அமைக்கப்பட்டிருந்த சோதனை நிலையங்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

பாப்பாமோட்டைஊடான புதிய பாதையை திறப்பதற்கு முன்னேற்பாடாக அப்பகுதியில் சோதனை நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

நிவாரணப் பொருள்கள் மற்றும் உணவுப் பொருட்களை இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு கொண்டு செல்ல லொறிகளில் பொருள்கள் மாற்றி ஏற்றப்படுவதற்குத் தேவையான இடங்களை பார்வையிடுவதற்காக மன்னார் மாவட்ட அரச அதிபர் எஸ்.எம். குரூஸ் உட்பட அதிகாரிகள் பலர் இன்று பாப்பாமோட்டைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

அனேகமாக எதிர்வரும் திங்கட்கிழமை முதல் புதிய பாதையூடான போக்குவரத்து ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

### நீதிமன்றத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தொடர்பான விசாரணை ஆரம்பமானது.

பலத்த பாதுகாப்புடன் கைவிலங்கிடப்பட்ட நிலையில் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட ராஜபக்ஷ ஒரு மணி நேரம் வாக்கு மூலம் அளித்தார்.

அதைத் தொடர்ந்து அவர் செம்மணிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

நேற்றைய விசாரணையில் சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அரச சட்டவாதி யசந்த கோத்தாக்கொட, குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் கீர்த்தி கஜநாயக்க ஆகியோரும் நீதிமன்றில் சமுகமளித்திருந்தனர்,

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த சட்டத்தரணிகள் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் சார்பில் ஆஜராகியிருந்தனர். (இ-3-5)

### மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்)

பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட அவரது சடலத்தை அவரின் மனைவி மரியறோகினி (வயது 34) மகள் லூர்து மரியமேரி (வயது 16) ஆகிய இருவரும் அடையாளம் காட்டினர்.

இது சம்பந்தமான மரண விசாரணை நேற்றுக் காலை பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்றது.

இறந்தவரின் மனைவி, மகள், சிறிய தந்தை ஆகியோருடன் மணற்காடு கிராம சேவை அலுவலர் செ. தோமஸ்யூட் ஆகியோரும் சாட்சியமளித்தனர். விபத்து மரணமென நீதிவான் தீர்ப்பளித்தார். (இ-109)

### வன்னிக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்)

இது மன்னார் மாவட்டத்தில் 90 சத வீதமான பிரதேசம் என்றும் தெரிவித்தார்.

புதிதாகக் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் எந்தக் கஷ்டங்களுக்கும் உள்ளாக்கப்படமாட்டார்கள்என்றும் அவர் கூறினார்.

இதேவேளை—கைப்பற்றப்பட்ட பகுதிகளில் உள்ள மக்[illegible] கும் பணிகள் தற்போது இடம் பெற்று வருகின்றன. (இ-6-164)

# விளையாட்டுப் போட்டி

பருத்தித்துறை புனித தோமையர் போரூட் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி கலட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலய மைதானத்தில் ஜோசப் இருதயநாயகம் தலைமையில் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை பங்குத்தந்தை அருள்திரு பி எம். இமானுவல் அடிகளாரும், கௌரவ விருந்தினராக போரூட் திட்ட முகாமையாளர் எம்.அனி பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

யாளம் காட்டினார்.

இந்த வழக்குக்காக நியமிக்கப்பட்ட யாழ். மேலதிக நீதிவான் எம். இளஞ்செழியன் முன்னிலையில் புதைகுழி இடத்தை ராஜபக்ஷ அடையாளம் காட்டியதை அடுத்து நண்பகல் 1. 30 மணியளவில் புதைகுழி தோண்டும்பணியை நிபுணர்கள் ஆரம்பித்தனர்.

பிற்பகல் 4. 30மணியளவில் அந்தப் புதைகுழியில் ஓர் ஆணின் முழங்கால் பாகம் தெரிந்ததை அடுத்து நிபுணர்கள் அந்தப் புதைகுழியில் மனித சடலம் உள்ளது என்ற முடிவுக்கு வந்தனர்.

அந்த சடலத்தில் 'ரவுஸர்' காணப்பட்டதால் அது ஆணின் சடலம் என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர்.

அதைத் தொடர்ந்து கறுப்புப் பொலித்தீன் மூலம் அந்தப் புதைகுழி மூடப்பட்டது.

இன்று காலை 9 மணிமுதல் தோண்டும் பணி மீண்டும் ஆரம்பமாகும் என நீதிவான் இளஞ்செழியன் அறிவித்தார். (இ-3-5-173)

# விபத்தில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்ப்பாணம் வண்ணை சிவன்கோயிலுக்கு சமீபமாக காங்கேசன்துறை வீதியில் நேற்று இடம்பெற்ற லொறி-சைக்கிள் விபத்தில் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

சைக்கிளில் சென்றவரான கஸ்தூரியார் வீதிப்பகுதியைச் சேர்ந்த இராமச்சந்திரன் (வயது 55) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

சடலம் யாழ். பொலீஸாரின் உதவியுடன் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு, மரணவிசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது.

### சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆசிய மன்றத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி மார்க் றீட் மக்கெனன், சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி இங்கிரிட் மஸாஜ் அம்மையார் ஆகியோரும்—

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ரி. சுந்தரலிங்கம், அந்த அமைப்பின் யாழ். அலுவலக இணைப்பதிகாரி எஸ். சிறீதரன், அதிகாரி செல்வி கௌரி சுந்தரலிங்கம் ஆகியோரும்—

மனித கௌரவத்துக்கான அமைப்பின் பிரதிநிதி செல்வி மகேஸ்வரி வேலாயுதமும் — பார்வையாளர்களாகப் பங்குபற்றினர்.

வடபகுதி காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள், மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சர்வதேச, உள்ளூர் பத்திரிகையாளர்களும் கொழும்பில் இருந்து வந்திருந்தனர். (இ-173-3-5)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361, ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17- 06- 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org